நிலநோக்கு இருமாதங்களுக்கு
ஒரு முறை வெளியாகும் ஒரு
சஞ்சிகையாகும். மனிதாபிமான
ஸ்தாபனங்களின் கூட்டமைப்பினால்
வசதிகள் வழங்கப்படும் சிவில்
சமூகத்தின் செயற்பாடுகளை
உள்ளடக்கியது

# நிலநோக்கு

2009 பெப்ரவரி
மலர்-2 , இதழ் 1
விலை ரூபா - 30.00
இருமாதங்களுக்கு ஒரு முறை



## கிழக்கில் யுத்தம் ஓய்ந்தும் மீனவர் பிரச்சினைக்கு முடிவில்லை.

P - 10

## யாழ்ப்பாணத்தை வாட்டி வதைத்த“நிஷா”

P - 20

## புத்தாண்டில்,புதுவீடுகளில்,புத்தொளி

P - 31

நிலநோக்கு

இலக்கம் : 30/81 1/1
லொங்டன் பிளேஸ்
கொழும்பு – 07 , இலங்கை .
தொலைபேசி :
(94-11)2506855, 2598413:
Web: www.humanitarian-srilanka.org
E- mail: groundview@cha.lk
நிலநோக்கு பற்றிய உங்கள் கருத்துக்களுக்கு
feedback@cha.lk
நிலநோக்கு சந்தா விளம்பரம்
மற்றும் விவரங்களுக்கு.
**0112598413**
**0112506855**

# புயலின் நடுவே பயணம்

அமெரிக்காவின் 44 வது ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வை பலரும் பார்த்து மகிழ்ந்தனர்.புதிய நிர்வாகத்தின் சின்னமாகவும், சமிக்ஞையாகவும் அந்த அனுபத்தைப் பலரும் நோக்கினர்.எமது நாடும் கூட இந்தப் புத்தாண்டில் பல சவால்களை எதிர் நோக்கியுள்ளது. வன்முறைகளாலும் வன்முறைக்காட்சிகளாலும் நாம் உறைந்து போயுள்ளோம்.எமது பொருளாதாரம் பல ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளது. வருமானமும் வாழ்வாதாரமும் குறிப்பாக தேயிலை, இறப்பர், சுற்றுலாத்துறை,புலம்பெயர்ன்தோர் வருமானம் என்பன சரிவை நோக்கிச் செல்கின்றன.சில துறைகள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளன. எமது நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் நாம் சுகப்படுத்த வேண்டிய காயங்கள் நிறைய இருக்கின்றன.யுத்தம் ,அழிவு என்பனவற்றுக்கு அப்பால் நாம் சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்பனபற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. குடிமக்களைப் பிரதிநிதித்துவம் செய்யவும்,பாதுகாக்கவும்ஆணைவழங்கப்பட்ட முக்கிய அரச நிறுவனங்கள் பல்வேறுசவால்களுக்கும் ,எதிர்பார்ப்புக்களுக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கின்றன.உண்மையில் இது சவால்களுக்குரிய ஒரு காலப் பகுதியாகும்.

அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் இருந்து நாம் ஒரு சுருக்கமான பாதையைத் தெரிவு செய்யலாம்.எமது தேசத்துக்கும் பொருந்தக் கூடிய சில வசனங்கள் அதிலும் இருக்கின்றன.

“நாம் ஒரு இளைய தேசமாக இருக்கின்றோம்.ஆனால் வேத நூல்களின் அடிப்படையில் சிறுபிள்ளைத்தனமான செயல்களை ஒதுக்கிவைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.நிலைத்து நிற்கும் எமது ஆன்மாவை மீள உறுதி செய்து கொள்ள வேண்டிய நேரம் இப்போது வந்துள்ளது: எமது சிறந்த வரலாறைத் தெரிவு செய்ய: அந்த விலை மதிப்பற்ற பரிசை முன்னெடுத்துச் செல்ல,அந்த உன்னதமான கருத்தை,தலைமுறை தலைமுறையாகக் கடந்து வந்து அந்தக் கருத்தைத் தொடர்ந்துக் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நேரம் வந்துள்ளது. எல்லோரும் சமம் என இறைவன் உறுதியளிக்கின்றான். எல்லோரும் சுதந்திரமானவர்கள் எல்லோரும் தமது மகிழ்ச்சியின் அளவை முழுமையாக முன்னெடுத்துச் செல்லும் சந்தர்ப்பத்துக்கு உரித்துடையவர்கள் என்ற உறுதியை இறைவன் அளிக்கின்றான்”

அட்டைப்பட அனுசரணை
solidar

# உள்ளே....


மனிதாபிமான அணுகுமுறைக்காக ஏங்கும் வன்னிப் பிரதேச மக்கள் 4



கிழக்கில் யுத்தம் ஓய்ந்தும் மீனவர் பிரச்சினைக்கு முடிவில்லை. 10



கதிர்காம புனித பூமியை அசுத்தமாக்கும் வேடதாரிகள் 18



யாழ்ப்பாணத்தை வாட்டி வதைத்த "நிஷா" 20



எதிர்கால நம்பிக்கையோடு வாழும் இடம்பெயர்ந்தோர் 23



# மனிதாபிமான அணுகுமுறைக்காக ஏங்கும் வன்னிப் பிரதேச மக்கள்.

வன்னிப் பகுதியில் மோதல்கள் உச்சகட்டத்தை அடைந்துள்ளன. இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தலைவர்களை இலக்கு வைத்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய எஞ்சியுள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக முன்னேறிக்கொண்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.



களமுனைகளில் ஆங்காங்கே இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டைகள் இரவு பகலாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த மோதல்களில் இரு தரப்புக்களிலும் பலர் கொல்லப்படுகின்றார்கள். பலர் காயமடைகின்றார்கள். எனினும், மோதல்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருமே, உயிர்ச்சேதம் பற்றிப் பரஸ்பரம்முரண்பட்ட கருத்துக்களையே தெரிவிக்கின்றனர்.

களமுனைகளின் உண்மையான நிலைமை என்ன என்பது தொடர்பாக பக்கச்சார்பற்ற தரப்பிலிருந்து தகவல்களைப் பெறமுடியாதுள்ளது. வன்னிப்பிரதேசத்தினுள்ளே செல்வதற்கு ஊடகத்தினருக்கோ அல்லது தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கோ அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் நிலையில் இரு தரப்பினரும் வெளியிடுகின்ற தகவல்களின் மூலமே களநிலைகள் குறித்து அறிய வேண்டியதாக இருக்கின்றது.

வன்னியில் களமுனைகளில் உள்ள சிறிய பிரதேசத்திற்குள் முடக்கப்பட்டுள்ள பொதுமக்கள் மோசமான துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். எறிகணைகளில் இருந்து தப்புவதற்காகப் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடுகின்ற அவர்களது ஓட்டத்திற்கு இன்னும் முடிவேற்படவில்லை பலர் இரராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பாதுகாப்பு தேடி ஓடி வந்துள்ளனர். இவர்களில் சிலர் எல்லைகளைக் கடக்கும் போது துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்திருக்கின்றார்கள். பத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 7 பேரின் சடலங்கள் வவுனியா வைத்தியசாலைக்கு அண்மையில் கொண்டு வரப்பட்டு அரசாங்கத்தின் உதவியோடு, உறவினர்களினால் வவுனியா பூந்தோட்டம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 6 பேர் இன்னும் வவுனியா, அனுராதபுரம் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். துரத்தி வந்த எறிகணைகளில் இருந்தும் விமானக்குண்டுத் தாக்குதல்களில் இருந்தும் உயிர்தப்புவதற்காக இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தபோது துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரத்த உறவுகளைப் பலிகொடுத்துவிட்டோமே என்று உயிர்தப்பிய குடும்பத்தினர் பெரும் துயரமடைந்திருக்கின்றார்கள. வவுனியா செட்டிகுளம் மணிக்பாம் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்கள் இந்தத் துயரத்தில் இருந்து எப்படி எப்போது மீளப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை.

இந்தச்சம்பவத்தில் தனது 3 வயது மகளைப் பறிகொடுத்த சிவனேஸ்வரன் சானந்தினி (32) தனது அக்கா, அண்ணனின் பிள்ளை, தம்பி ஆகியோரையும் பறிகொடுத்துள்ளார். "இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்காக நாங்கள் வந்தபோது, காட்டுப்பகுதி. இரவு நேரம் திடீரென வெடிச்சத்தம் கேட்டது. சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் எங்களில் பலர் வெடிபட்டு விழுந்தார்கள். எனது கணவனும் குண்டடிபட்டு விழுந்தார். எல்லோரும் சத்தமிட்டு கத்திக்குளறினோம். வெடிச்சத்தம் நின்றதும், மெதுவாக எழுந்து பார்த்தேன். எனது கணவன் உடலில் பல இடங்களில் காயமடைந்து விழுந்து கிடந்தார். அவரால் எழும்ப முடியவில்லை. எனது 3 வயது பிள்ளை எங்கே என தேடிப்பார்த்தபோது, முகம் சிதைந்த நிலையில் இறந்து கிடந்தது, அதன் கால் முறிந்து கிடந்தது. கண்கொண்டு பார்க்கக் கூடிய நிலையில் அது இல்லை.

சுமார் அரை மணித்தியாலத்தின் பின்னர் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்த இராணுவத்தினர்

எங்களை அழைத்துச் சென்றார்கள். காயமடைந்தவர்களையும் தூக்கிச் சென்றார்கள். இறந்தவர்களின் உடல்களையும் கொண்டு சென்றார்கள். 5ஆம் வாய்க்காலில் இருந்த இராணுவத்தின் வைத்திய நிலையத்தில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கிருந்து காயமடைந்தவர்களை அவர்கள் வாகனங்களில் கொண்டு சென்றார்கள். காயமில்லாதவர்களை கிளிநொச்சி வைத்தியசாலை கட்டிடத்திற்குக் கொண்டு சென்று பின்னர், ஓமந்தைக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்த பின் நெளுக்குளம் இடைத்தங்கல் முகாமில் எங்களைத் தங்க வைத்தார்கள். இறந்தவர்களின் உடல்களை வவுனியா வைத்தியசாலையில் வைத்திருந்தார்கள். நாங்கள் உறவினர்கள் அங்கு செல்வதற்கு இராணுவம் அனுமதி கொடுத்தது. வைத்தியசாலையில் நான் எனது மகளைப் பார்க்கவில்லை. இறந்தவர்கள் 7 பேரையும் ஒரே குழியில் பூந்தோட்டம் மயானத்தில் அடக்கம் செய்தார்கள். எனக்கு 5 பிள்ளைகள் எனது கணவன் இன்னும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். எனது 3 வயது பிள்ளையை நான் பறிகொடுத்துவிட்டேன். நான்கு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப் போகிறேனோ தெரியவில்லை“ என்று அவர் தனது சோகத்தைக் கொட்டித் தீர்த்தார்.

இதேபோன்று இன்னும் பலர் தமது உறவுகளை இழந்த நிலையில் வன்னியில் இருக்கின்றார்கள். காயமடைந்தவர்களுக்குத் தேவையான உரிய மருத்துவ வசதிகள் வன்னிப்பகுதியில் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது. புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஒன்று மாத்திரமே அதன் சொந்த இடத்தில் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. அங்கு 9 வைத்தியர்கள் மாத்திரமே இரவு பகலாகக் கடமையாற்றுகின்றார்கள். அறுவை சிகிச்சை நிபுணர், வைத்திய நிபுணர்கள் அங்கு இல்லை. இந்த 9 வைத்தியர்கள் மாத்திரமே அனைத்து வேலைகளையும் பார்க்க வேண்டியிருப்பதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் அரைவாசிபேர் கட்டில்

**சுமார் அரை மணித்தியாலத்தின் பின்னர் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்த இராணுவத்தினர் எங்களை அழைத்துச் சென்றார்கள். காயமடைந்தவர்களையும் தூக்கிச் சென்றார்கள். இறந்தவர்களின் உடல்களையும் கொண்டு சென்றார்கள். 5ஆம் வாய்க்காலில் இருந்த இராணுவத்தின் வைத்திய நிலையத்தில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கிருந்து காயமடைந்தவர்களை அவர்கள் வாகனங்களில் கொண்டு சென்றார்கள். காயமில்லாதவர்களை கிளிநொச்சி வைத்தியசாலை கட்டிடத்திற்குக் கொண்டு சென்று பின்னர், ஓமந்தைக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்த பின் நெளுக்குளம் இடைத்தங்கல் முகாமில் எங்களைத் தங்க வைத்தார்கள்.**

வசதியின்றி நிலத்தில் இருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்த வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி டாக்டர் பி.சத்தியரூபன் தெரிவித்துள்ளார். அன்ரிபயடிக் மருந்துகள் உட்பட சத்திர சிகிச்சைக்கு அவசியமான முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலும் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் ஓய்வு ஒழிச்சல் இன்றியுமே தாங்கள் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையைச் சூழ்ந்த பகுதிகளில் அண்மைய நாட்களாக நடத்தப்படுகின்ற எறிகணை தாக்குதல்களினால் அச்சம் ஒருபுறமும், நாளாந்தம் எறிகணை தாக்குதல்களில் காயமடைபவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதனாலும் தாங்கள் பெரும் மன உளைவுக்கு உள்ளாகியிருப்பதாகவும் டாக்டர் சத்தியரூபன் தெரிவித்துள்ளார். வன்னிப்பகுதிக்கும் வவுனியாவுக்கும் இடையிலான கிரமமான அம்புலன்ஸ் சேவையை உறுதிப்படுத்தி மேல்சிகிச்சைக்காக நோயாளர்கள் வவுனியாவுக்குக் கொண்டுசெல்லப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

வன்னிப்பிரதேசத்தில் எஞ்சியுள்ள ஒன்றிரண்டு வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துப்பொருட்கள் சீராகக் கிடைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் வைத்தியசாலையின் வைத்தியர்கள், பணியாளர்களின் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனவும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரீ.வரதராஜா சர்வதேச செஞ்சிலுவைக்குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அவசர மேல்சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவேண்டிய 56 நோயாளிகள் இருப்பதாகவும் இவர்களை வவுனியாவுக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சிகள் கடந்த சனிக்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அது சிலநாட்களாக கைகூடவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இநத முயற்சிகளில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக சர்வதேச செஞ்சிலுவைக்குழு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

மரணத்தின் பிடியில் சிக்கியுள்ள வன்னிப்பிரதேச மக்களின் குரல்கள் வெளியுலகத்தை சரியான முறையில் சென்றடையாத நிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கடிதம் ஒரு மெல்லிய குரலாக வன்னியிலிருந்து வெளிப்பட்டிருக்கின்றது. அங்கு நிலவுகின்ற மனிதர்களின் மரண அவலத்தை மனிதாபிமான ரீதியில் அணுகி அந்த மக்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டியது மனித நேயம் மிக்க அனைவரினதும் அவசரமான பொறுப்பாக இப்போது உள்ளது.

*~அதிரன்*

# மன்னார் மாவட்டத்தில் அதிகரிக்கும் அகதிகள் வருகை.

கடந்த இரு மாதங்களாக மன்னார் மாவட்டத்தில் வன்னி அகதிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றது. சுமார் 375 குடும்பங்கள் களிமோட்டை, சிறுக்கண்டல், பார்ஜ் தொழிற்பயிற்சி நிலையம் ஆகிய இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை வெளியாட்களும், உறவினர்களும் சென்று பார்வையிட தடை விதிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் களிமோட்டை முகாமிலிருந்து 30 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை செல்வதற்கும், 60 இற்கு மேற்பட்டவர்கள் கூலி வேலை செய்வதற்கும், அனுமதி வழங்கப்பட்டுள்ளது. CHA நிறுவனத்தின் அனுசரனையுடன் தற்காலிக அடையாள அட்டை வழங்கப்பட்டதனால் இவ்வாய்ப்பு ஏற்பட்டது. இந்த 3 முகாம்களிலும் வயது வந்தோர், கர்பிணிப் பெண்கள், நோயாளர்கள், சிறார்கள் போன்றோர் தங்கியுள்ளனர். இவர்களில் 50% இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பெற்றோரை இழந்த சிறார்களும், கணவனை இழந்த மனைவியரும், பிரிந்த குடும்பங்களும் இவர்களில் காணப்படுகின்றனர். அதிகமானோர் ஒரு சில ஆடைகளுடனும், தமது பெறுமதிமிக்க ஆவணங்களுடனும் வந்துள்ளனர்.

மேலும் 40% ஆன இடம்பெயர்ந்தோர் தமது முக்கிய ஆவணங்களான தே.அ.அட்டை, தபால் அடையாள அட்டை, பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், காணி உறுதிகள், கல்வி அத்தாட்சிகள் போன்றவற்றை இடப்பெயர்வின்போது இழந்துள்ளனர். இவற்றை மீளப்பெறுவதற்கும், இவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ வேண்டுமென இவர்கள் விரும்புகின்றனர்.

> **மீனவர்களுக்கு சிறிது வரப்பிரசாதம் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது இவர்களில் 60% மானோர் ஆழ்கடலுக்கு செல்லவும், இரவு வேளைகளில் மீன்பிடிக்கச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மீனவர்கள் அதிக வருவாயைப் பெற்றுள்ளதுடன், நாளாந்தம் சுமார் 15 இற்கும் மேற்பட்ட மீன் லொறிகள் கொழும்புக்குச் செல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது.**

மேலும் 40% வீதமானோர், மன்னார், வவுனியா, புத்தளத்தில் உறவினர்களைக் கொண்டுள்ளனர். பாதுகாப்பு படையினரின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இவர்கள் உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு விரும்புகின்றனர். வைத்திய வசதிகள் இம் முகாம்களில் பற்றாக்குறையாக காணப்படுகின்றன. குறிக்கப்பட்ட ஒருசில வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் இவர்களுக்கு உதவ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவை போதுமானதாக இல்லை. அதிகமான பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் கடந்த 3 மாதங்களாக இவர்கள் கல்வியை இழந்துள்ளனர். யுனிசெவ் இன் அனுமதியுடன் அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்க விரும்புகின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள் சிலரும் மனித நேய அமைப்புகளின் உதவி பெற்று கல்வியைத் தொடர விரும்புகின்றனர்.

கடந்த மார்கழியில் பெய்த மழையின் போது இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் மலேரியா, டெங்கு காய்ச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர். தற்போது பெய்யும் கடும் பனி காரணமாக குளிரினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் சுமார் 75,000 நபர்கள் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. உலக பொருளாதார நெருக்கடி காரணமாக சில அரச சார்பற்ற ஸ்தாபனங்களும், தனியார் நிறுவனங்களும், வர்த்தக நிறுவனங்களும் தமது ஊழியர்களைக் குறைத்துள்ளனர். இதனால் மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துக் காணப்படுகின்றது.

மாவட்டத்தின் மொத்த இலக்கில் 55மூ ஆன நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1 ஏக்கர் நெற் செய்கைக்கு ஒரு விவசாயி குறைந்தது 35-40 ஆயிரம் ரூபா வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. அண்மையில் பெய்த பெரும் மழையின் போது 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மார்கழி, தை மாதங்களில் மரக்கறியின் விலை பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டது.

வீட்டுத்தோட்டச் செய்கைக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊக்கமளிப்பின் எதிர்வரும் காலங்களில் மரக்கறி வகைகளின் விலை குறைவடையும்.

மக்களின் எதிர்பார்ப்பு தற்போது மன்னாரின் வட கடல் முழுமையாக இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளபடியினால் மீனவர்களுக்கு 25 குதிரை வலுவுக்கு மேற்பட்ட மீன்பிடி இயந்திரங்களைப் பாவிக்க அனுமதிக்கப்படல் வேண்டும், என்பதாகும். மேலும் இடம்பெயர்ந்தோரின் குறையைப் போக்கும் முகமாக பூனகரியிலிருந்து பேசாலைக்கு கப்பல் பிரயாணம் ஒன்று ஏற்பாடு செய்யப்படுமாயின் பல வன்னி இடம்பெயர்ந்தவர்கள் கடல் வழியாக குறுகிய நேரத்தில் பேசாலை, மன்னார், வவுனியா, ஆகிய இடங்களுக்கு வந்துசேர முடியும். அத்தோடு காயப்பட்ட பொதுமக்களின் உயிர்களும் காப்பாற்றப்படும். அத்துடன் யாழ் மக்களின் கொழும்பு பிரயாண கஷ்டத்தை போக்கும்முகமாக குறிகட்டுவானிலிருந்து பேசாலைக்கு சிறு கப்பல் போக்குவரத்து செய்யப்படின், அரச ஊழியர்கள், நோயாளர்கள், வெளிநாடு செல்வோர் பல்கலைக்கழகம் செல்வோர்,சுமார் 2 மணித்தியாலத்தில் யாழிலிருந்து மன்னாரை வந்தடைய முடியும். இங்கிருந்து அன்றைய தினமே கொழும்பு செல்ல முடியும். இதற்கு பொறுப்பான அமைச்சுகள் இதைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர்.

மேலும் அண்மையில் மன்னார் மாவட்டத்தில் காணாமல் போவோர், தேவையற்ற கைதுகள், கொலை மிரட்டல்கள் போன்றன சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றை பாதுபாப்புத் துறையினர் கவனத்தில் எடுப்பதும் நல்லது.

**லூயிஸ்**

# RAAF தரும் விளக்கம்

யாழ்குடாநாட்டிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு தற்போது புத்தளம் பிரதேசத்தில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் சம்பந்தமாக நிலநோக்கு ஜனவரி/பெப்ரவரி 2008 இதழில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

இந்தக்கட்டுரை சம்பந்தமாக சமூக அபிவிருத்திக்கான செயற்பாட்டு மன்றத்தின் அகதிகள் தகவல் மையம் சில விளக்கங்களை எமக்கு அனுப்பிவைத்துள்ளது. RAAF என ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் இந்த நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஏ.ஜி.அனீஸ் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள இந்த விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மேற்படி கட்டுரையில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடபகுதி முஸ்லிம்கள் தொடர்பான எண்ணிக்கை 30ஆயிரம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அக்டோபர் 1990ல் வடபகுதி முஸ்லிம்களின் எண்ணிக்கை 75ஆயிரம் ஆகும். (ஆதாரம்; S.H ஹிஸ்புல்லாஹ் எழுதி RAAF ஆல் வெளியிடப்பட்ட “முஸ்லிம் அகதிகள்-இலங்கை இனப்பிரச்சினையில் மறக்கப்பட்ட மக்கள்”என்ற நூல்,முரண்பாட்டின் மூல காரணங்களை இது ஆராய்கின்றது. இலங்கையின் வடக்கு கிழக்கின் காணிப்பிரச்சினை S.H.ஹிஸ்புல்லாஹ்,P.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் காலிங்க டியூடர் சில்வா ஆகியோரால் எழுதப்பட்டு UNHCR மற்றும் FCE ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.

இது தவிர முந்தல், வனாத்தவில்லு, ஆரச்சிகட்டு ஆகிய பிரதேசங்களிலும் முகாம்கள் அமைந்துள்ளமைக்கான தகவல்கள் உள்ளன. மேலும் இந்தக் கட்டுரையில் கல்பிட்டிப்பிரதேசம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. கல்பிட்டிப் பிரதேசத்தில் 50வீதத்துக்கும் அதிகமான முகாம்கள் உள்ளன.

நாம் ஏற்கனவே உங்களோடு தொடர்புகொண்டு கலந்துரையாடியதன் பிரகாரம் உங்களது சஞ்சிகையில் இந்தத் திருத்தங்களை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



# உலகின் பார்வையை ஈர்த்துள்ள பராக் ஒபாமா

ஐக்கிய அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக பராக் ஹுசைன் ஒபாமா பதவி ஏற்றுள்ளார். இப்பதவி ஏற்பானது அமெரிக்க வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது. முழு உலகினையும் ஆட்டிப்படைக்கும் ஏக வல்லரசான அமெரிக்காவின் ஜனாதிபதியாக வருபவர் முழு உலகிலும் செல்வாக்குள்ள ஒரு நபராக மாறுவார். இதனால், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முழு உலகும் கவனித்து வருவதென்பது வழமையான விடயம் தான். ஆனால், இந்த முறை வரலாற்றில் ஜனாதிபதியாகும் முதலாவது ஆபிரிக்க அமெரிக்கரான ஒபாமாவினை முழு உலகின் மொத்தக் கண்களும் விசேட எதிர்பார்ப்புகளுடன் பின் தொடர்ந்தன.
அமெரிக்கா இன்று பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அமெரிக்கப் பொருளாதார நெருக்கடியைக் கண்டு முழு உலகுமே அஞ்சுகின்றது. இந்த வேளையில் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒபாமாவின் முன் பலத்த சவால்கள் காணப்படுகின்றன.

அமெரிக்கா இன்று பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அமெரிக்கப் பொருளாதார நெருக்கடியைக் கண்டு முழு உலகுமே அஞ்சுகின்றது. இந்த வேளையில் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒபாமாவின் முன் பலத்த சவால்கள் காணப்படுகின்றன.

அமெரிக்கா முதல் இந்தியா வரையான ஊடகங்கள் அவரை உலகை மீட்க வந்த அவதார புருஷர் போல சித்திரிக்கின்றன. ஆனால், ஒபாமா தன் முன்னால் உள்ள சவால்களை எல்லாம் எவ்வாறு தாண்டி முன்னேறப் போகிறார்? தன் மீதான பல்வேறு தரப்பினரின் எதிர்பார்ப்புக்களை எப்படிப் பூர்த்தி செய்யப் போகிறார்? அமெரிக்காவை உலகின் முன் எப்படித் தூக்கி நிறுத்தப் போகிறார் என்ற கேள்விகள் இன்று எழுகின்றன.

2008 இல் நடைபெற்ற கட்சி வேட்பாளருக்கான தேர்தலில் ஹிலாரி கிளின்டனைத் தோற்கடித்து ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக தெரிவான ஒபாமா 2008 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளரான ஜோன் மக்கெயினை வென்று ஜனாதிபதியாகிறார். 52.9% மான மக்கள் வாக்குகளையும் மொத்தம் 538 தேர்தல் கல்லூரி வாக்குகளில் 365 இனையும் பெற்று சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளார். இவரது வெற்றி அமெரிக்க ஜனநாயகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். ஒபாமா ஆபிரகாம்லிங்கன்

சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பைபிளில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

ஒபாமா தனது தேர்தல் பிரசாரத்தில் முக்கியமாக முன்வைத்த கருத்து "மாற்றம் முடியும்" என்பதாகும். இன்று அமெரிக்கா பாரிய மாறுதலை வேண்டி நிற்கும் இத்தருணத்தில் ஒபாமாவின் இக்கருத்து மக்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. குடியரசுக்கட்சி வேட்பாளரான மக்கெய்ன் தான் புஷ்ஷின் கொள்கைகளைப் பெருமளவில் தொடர்ந்து பின்பற்றப் போவதாகக் கூறியிருந்தார். இது புஷ்ஷின் வழிமுறைகளில் அதிருப்தியடைந்த பலரையும் ஒபாமாவின் பக்கம் திருப்பிவிட்டது. இதனால், தான் என்றுமில்லாத வகையில் அவரது தேர்தல் வெற்றியின் பின்னரான பேச்சைக் கேட்கவென சிக்காகோவின் கிராண்ட் பார்க்கில் 240,000 பேர் திரண்டனர். அமெரிக்காவிற்கு மாற்றம் வந்துவிட்டது என்று இங்கு பேசும்போது ஒபாமா குறிப்பிட்டார்.

ஒபாமா குறிப்பிடுகின்ற "மாற்றம்" எத்தகையது? எப்படி அவர் அதனைக் கொண்டு வரப் போகின்றார்? அமெரிக்காவின் தேவையையும் உலக மக்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் அவரிடமுள்ளனவா? போன்ற கேள்விகளுக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். அமெரிக்க வரலாற்றில் பேச்சு வன்மையால் மக்களின் ஆதரவை பெற்றதோடல்லாமல் காங்கிரஸையும் ஆட்டிப்படைத்த பல ஜனாதிபதிகளைக் காணலாம். ஆனால், கென்னடிக்குப் பின்னர் அந்த ஆளுமையுடன் வந்திருப்பவர் ஒபாமா தான் என்று கூறப்படுகின்றது. இந்த ஆற்றல் மூலம் செல்வாக்கினை வளர்த்துக்கொண்டு பல பயனுள்ள மாற்றங்கள் ஒபாமாவால் செய்ய முடியும். எப்படியும் தற்போதைய ஜனாதிபதி புஷ்ஷை விட ஒபாமா எவ்வளவோ மேல் என்பதில் எவருக்கும் எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது. எனவே, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அவர் இருப்பார் என்று கருத முடியாமல் போனாலும், நாம் அவரது வெற்றியில் சந்தோஷப்படக் காரணம் இருக்கின்றது.

ஒபாமாவின் முன் இன்றுள்ள பலத்த சவால் அவர் (அரைகுறையாகவாவது) கறுப்பர் என்பதால் அம்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எதிர்பார்ப்பாகும். அவரின் இயலுமையை மீறி அவ் எதிர்பார்ப்பு வீங்கியுள்ளதை நுணுக்கமாகப் பார்ப்பவர் புரிந்து கொள்வர். ஒபாமா தான் ஒரு கறுப்பர் என்பதைத் தேர்தல் பிரசாரத்திற்கு நன்றாகப் பயன்படுத்தியிருந்தார். இதனால், அமெரிக்காவில் அம்மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டிய கடப்பாடு அவருக்கு உள்ளது. ஆனால், ஒபாமா தனது கறுப்பின அடையாளத்துடன் தன்னை வளர்த்த வெள்ளையினப் பாட்டியைப் பற்றிச் சொல்ல ஒருபோதும் பின் நிற்பதில்லை. தனது இரத்தத்திலுள்ள வெள்ளையினக் கலப்பை அவர் தொடர்ந்தும் முக்கியத்துவப்படுத்தி வந்துள்ளார். இதுமட்டுமல்ல, தனது முஸ்லிம் அடையாளத்தை அவர் வெளிப்படுத்தவே இல்லை. இப்படியெல்லாம் இருந்திருக்காவிடில் அவர் தேர்தலில் வென்றிருக்க முடிந்திருக்காதோ என்னமோ? ஆனால், அவரிடம் எதிர்பார்க்கும் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை அவருக்கு ஏற்படும்.

**ஒபாமா குறிப்பிடுகின்ற "மாற்றம்" எத்தகையது? எப்படி அவர் அதனைக் கொண்டு வரப் போகின்றார்? அமெரிக்காவின் தேவையையும் உலக மக்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் அவரிடமுள்ளனவா? போன்ற கேள்விகளுக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். அமெரிக்க வரலாற்றில் பேச்சு வன்மையால் மக்களின் ஆதரவை பெற்றதோடல்லாமல் காங்கிரஸையும் ஆட்டிப்படைத்த பல ஜனாதிபதிகளைக் காணலாம். ஆனால், கென்னடிக்குப் பின்னர் அந்த ஆளுமையுடன் வந்திருப்பவர் ஒபாமா தான் என்று கூறப்படுகின்றது.**

ஒபாமா எதிர்நோக்கும் மற்றொரு முக்கிய சவால் அமெரிக்காவை உலக வல்லரசு என்ற நிலையில், தொடர்ந்து தக்கவைப்பதாகும். சோவியத் யூனியன் சுக்குநூறானதன் பின்னர் உலகின் ஏக வல்லரசாக இருந்துவந்த அமெரிக்காவுக்கு இன்று ஒரு சவாலான காலகட்டம். பிராந்தியத்திற்கு ஒரு வல்லரசு என பல நாடுகள் பலமாகவும் அமெரிக்காவுக்கு சவாலாகவும் வளர்ந்துவரும் இக்காலத்தில் மாறிவரும் இவ்வுலக ஒழுங்கிற்கு ஏற்ப எப்படி அமெரிக்காவில் மாற்றத்தைச் செய்யப்போகிறார்? அமெரிக்க மக்களின் அபிமானத்தை வென்ற அவர் அதை எப்படி தக்கவைத்துக் கொள்ளப்போகிறார்? என்பது ஒரு முக்கியமான சவாலாகும்.

அடுத்ததாக, அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியைக் குறிப்பிடலாம். அமெரிக்க வங்கிகளின் சரிவுடன் உலகின் பல நாடுகளிலும் பொருளாதார நெருக்கடிகள் தலையெடுக்கத் தொடங்கிவிட்டன. இதனை எப்படி ஒபாமா கையாளப்போகிறார்? ஈராக் மீதான யுத்தச் சுமை அமெரிக்கப் பொருளாதாரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றப்போவதாக ஒபாமா குறிப்பிட்டுள்ளமையும் இந்த அடிப்படையிலேயே ஆகும். ஆனால், ஆப்கானிஸ்தான் போரினைத் தொடரப் போவதாக அவர் கூறியுள்ளார். தலிபான் இயக்கம் முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக உள்ளது.

ஒபாமா ஒரு முதலாளித்துவ ஆதரவாளரேயாவார். அவரது தேர்தல் பிரசாரச் செலவுகளுக்குக் கூட அமெரிக்காவின் முக்கிய முதலாளிகளின் ஆதரவு இருந்ததாகக் கூறப்படுகிறது. இப்படியிருக்க அவர்களுக்கு எதிரான ஒரு தீர்வுக்கு ஒபாமா போவாரா? அப்படிப் போகாமல் இப்பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியுமா? என்பது முக்கியமானதொன்றாகும்.

இவ்வாறான சவால்களின் மத்தியில் ஒபாமா பதவியேற்றுள்ளார். இவற்றையெல்லாம் அவர் வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமும் ஆகும். பல்வேறு தரப்பினரின் பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அவர் என்னவாறான நிலையை எடுப்பார் என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கலாம். எது எப்படி இருப்பினும் ஒபாமா பதவியேற்றுள்ள இவ்வேளையில் மாற்றம் ஒன்று ஏற்படுமெனின் அது வரவேற்கத்தக்கதாகவும் உலக மக்களுக்கு நன்மை அளிப்பதாகவும் இருக்குமென எதிர்பார்ப்போம்.

*~அதிரன்*



சில காலத்திற்கு முன் சீனதுறைமுகதில் இருந்த நல்லதொரு பாரிய வலையின் நஷ்டம்



ஜி. திருநாதன்



எஸ். காலிராசா-

# கிழக்கில் யுத்தம் ஓய்ந்தும் மீனவர் பிரச்சினைக்கு முடிவில்லை.

திருகோணமலை திரகடவூர் பிரதேசத்தில் பரம்பரையாக வசித்த கே. பரமேஷ்வரனை நாம் சந்தித்த போது, அவர் திருகோணமலை நகரத்தின் மத்தியில் தாங்கொணா பழைய இரும்புகளை தாங்கிய வண்ணம் மிதிவண்டி கடையொன்றை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தார். புதிய பாடசாலை தவணையில் தம் பிள்ளைகளுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை வாங்குவதற்கு பணம் திரட்டும் நோக்கில் தோட்டத்திலிருந்த பழைய இரும்புகளை விற்கச் செல்வதாக அவர் கூறினார். திருகோணமலை மீனவர்கள் தற்போது முகம் கொடுக்கும் சோகத்துக்குச் சான்றாக இது இருந்தது.

" நாங்கள் இப்படி வாழ்தவர்களல்ல ....மீனவர்கள் என்றால் நன்றாக சாப்பிட்டு குடித்து வாழ்ந்த மக்கள;... நாம் எமது சந்தோஷம் ஒருபுறம் இருக்க,இன்று பிள்ளைகளுக்கு புத்தகங்களை வாங்கி கொடுக்கக் கூட வசதியில்லை. யுத்தத்தோடு எங்களுக்கு கடல் வரையறுக்கப்பட்டது. நாம் இரண்டு வருடங்களாக யுத்தம் முடியும் என காத்திருந்தோம். அந்த காலத்தில் நாங்கள் எங்கள் பிள்ளைகளினதும் மனைவிமார்களினதும் நகைகளை ஈடுவைத்துதான் சாப்பிட்டோம். ஆனால் கடவுளே என்று இன்று கிழக்கில் யுத்தம் இல்லை ஆனால் எங்களுக்கு போட்ட தடையோ, இன்னும் நீங்கவில்லை. கடற்படையினர் சொல்லும் நேரத்தில் நாங்கள் கடலுக்கு போவதில் பிரயோஜனம் இல்லை. மீன் கிடைக்கும் நேரத்தில் தான் போகவேண்டும். நாங்கள் அரசிடமும் கடற்தொழில் அமைச்சரிடமும் கேட்பது தேர்தல் காலத்தை போலல்லாது உண்மையாக எங்கள் பிரச்சினைகளை வந்து பார்க்க வேண்டுமென்பதாகும்... பரமேஷ்வரன் கூறிமுடித்தார்.

திருகோணமலையில் வசிக்கும் பெரும்பான்மையான மக்கள் அண்மைக்காலம் வரை யாரிடமும் கையேந்தாது வாழ்ந்தற்கு காரணம் திருகோணமலை கடலிலத் கிடைக்கும் அந்த மீன் வளம்தான். அவர்களின் பிள்ளைகள் பிள்ளைகளின் பிள்ளைகள் தொடர்ந்தும் இத்தொழிலில் ஈடுபடுவதற்கான காரணம் அவர்கள் அரசாங்கத்திற்கும் சுமையாக இருக்கக்கூடாதென்பதாகும். ஆனாலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையுடன் மீனவத் தொழிலுக்கு எதிராக அரசினால் விதிக்கப்பட்ட தடை இன்றும் அகற்றப்படாமல் இருப்பதனால் பிரதேசத்தில் மீனவர்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர். அநேக மீனவர்கள் தங்கள் மீனவத் தொழிலை விட்டுவிட்டு கூலி வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

இருபது வருடங்களுக்கு பிறகு நடத்தப்பட்ட கிழக்கு மாகாண சபை தேர்தலை திருகோணமலை மக்கள் அங்கீகரித்தமைக்கான காரணம் இதற்கு முதல் என்றும் காணதாவாறு அமைச்சர்கள் தொடர்ச்சியாக வந்து பிரச்சினைகளை தீர்க்க முயற்சிகளை எடுத்தமையாகும் அந்த வகையில் தற்போதைய கடற்தொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மற்றும் பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

கடந்தமாகாண தேர்தலின்போது திருகோணமலையிலுள்ள பெரும்பான்மையான மீனவர்களின் பிரச்சினைகளுக்கு செவிமடுக்க நியமிக்கப்பட்டிருந்தவர்கள் இவ்விரு அமைச்சர்களும்தான் என்பது பிரதேச மக்களுக்கு ஓர் இரகசியமல்ல. இவ்விரு அமைச்சர்களிடமும் மக்கள் கேட்டுக்கொண்டது என்னவென்றால் தங்களுக்கு இரண்டு மணிக்கு கடலுக்கு செல்ல அனுமதி தரவேண்டுமென்பதாகும்.

இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் திருகோணமலையின் பழைய மீனவரான ஹரதாஸ் தோட்ட மீனவ சங்கத்தின் தலைவர் சமாதான நீதவான் லீலசேன கலப்பத்தி இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களுக்கு தொழிலுக்கு போகவிடுவது காலையில் 4 மணிக்குதான் மேலும் பொயின்டுக்கு போய் பாஸ் கொடுத்து அனுமதி வாங்கி கடலுக்கு இறங்கும் போது 4.45 ஆகிவிடும். விடியற்காலையில் தான் மீன் பிடிக்கலாம். ஆறு மணிக்கு மேல் மீன் பிடிக்க முடியாது. இது கடற்படையினருக்கு விளங்குவதில்லை.


லீலசேன கலப்பத்தி


ஈ. ஏ. பி பிரேம ஜயந்த


டப்லிவ். கே. ரொஷான்


ஆனந்த மூர்த்தி


லக்ஷ்மி தேவி

ஆகவே நாம் கடற்தொழில் அமைச்சர் மூலமாக அவர்களுக்கு இதை தெரியப்படுத்தினோம். நாங்கள் நாட்டின் பாதுகாப்பை நூற்றுக்கு இருநூறு மடங்கு மதிக்கின்றோம்....உதவி செய்கின்றோம்...ஆனால் நாங்களும் வாழ வேண்டும்...எங்கள் பிள்ளைகள் சாப்பிட்டு குடிக்க வேண்டும்....எங்களுக்கு வேறு தொழிலும் இல்லை...." என்றார் லீலசேன கலப்பத்தி

லீலசேன கலப்பத்தி கூறுவதன் படி கடந்த மாகாண சபை தேர்தல் காலத்தில் திருகோணமலை மீனவர் சமூகத்தை கண்டு அவர்கள் பிரச்சினை குறித்து கலந்தாலோசிக்க கடற்தொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மற்றும் பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா ஆகியோர் சீனத்துறைமுக கொட்பே மீனவ கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கடற்படையினருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பின்னர் திருகோணமலை மீனவ சமூகத்திற்கு விடியற்காலை இரண்டு மணிக்கு கடலுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அது வருகிற தேர்தலை முன்வைத்து கொடுக்கப்பட்ட தீர்மானம் என்றாலும் அது பிரதேச மக்களின் பாராட்டை பெற்றது. அதே போல கடற்படையினர் கப்பல்கள் செல்கின்ற நாட்களில் மீனவர்கள் கடலுக்கு செல்வதில்லை என்ற உடன்பாட்டிலிருந்தனர்.

"உண்மையாகவே சொல்லப்போனால் பாதுகாப்பு கருதித்தான் இந்த தடை விதிக்கப்பட்டது என்பது எங்களுக்கு தெரியும்;...ஆனாலும் காலை இரண்டு மணிக்கு கடலுக்கு செல்வது அவ்வளவு பெரிய விடயமல்ல. ஏனென்றால் கரையில் கடற்படையினர் இருக்கின்றனர். அங்கே எங்கள் அடையாள அட்டையை வைத்துவிட்டு பாஸ் எடுத்துக்கொண்டு செல்ல வேண்டும். மீண்டும் வரும்போதும் நேரே பொயின்டுக்குத்தான் வருவோம்.

**இது சுறா மீன் பிடிக்கின்ற காலம்..... மீனவர்கள் நன்றாக சம்பாதிக்கின்ற காலம்.... நாங்கள் நிலாவெளி மற்றும் புறாமலை ஆகிய இடங்களுக்கு சென்று மீன் தீணியை தேடி வந்துதான் சுறா பிடிக்கச்செல்வோம். அதாவது சுறா பிடிப்பதற்கான தீணிகள் புறாமலை எனும் இடத்தில் தான் கிடைக்கின்றன..... ஆனால் இப்போது எங்களுக்கு புறாமலைக்கு செல்ல அனுமதி இல்லை. இந்த தடையை நீக்கித் தருமாறு நாங்கள் மிக தாழ்மையாய் கடற்படையினரிடமும் அரசாங்கத்திடமும் கேட்டுக்கொள்கிறோம்.**

இரண்டு மணிக்கென எமக்கு அனுமதி கிடைத்தால் பரிசோதிக்கப்பட்டு பாஸ் எடுத்துக்கொண்டு ஆகக்குறைந்தது 2.30க்கு கடலுக்குள் இறங்கலாம். மூன்று மணித்தியாலம் வேலை செய்ய கிடைத்தால் எங்களுக்கு வேறு ஒன்றுமே தேவையில்லை. கடற்படையினரின் கப்பல்கள் செல்லும் நாட்களில் நாங்கள் மீன்பிடிக்காமல் இருக்கலாம். ஏனென்றால் எங்கள் வயிற்றைவிட நாட்டின் பாதுகாப்பு முக்கியம்;........" திருக்கடலூர் எஸ். காலிராசாஇவ்வாறு கூறினார்.

மீனவர்களின் தொழில் காலம் மற்றும் தூரம் ஆகியவற்றை தீமானிப்பது கடற்படையினர் ஆகும். அங்கே மீனவர்கள் மற்றும் கடற்படையினருக்கு இடையே பரஸ்பரம் காணப்படுவது இயற்கைதான். காரணம் மீனவர்களின் தொழிலை படையினரும் படையினரின் தொழிலை மீனவரும் ஒருவருக் கொருவர் புரிந்துகொள்ளாமையாகும் எவ்வாறாயினும் கடந்த மாகாண சபை தேர்தல காலத்தில் கடற்தொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா அவர்கள் சில கலந்துரையாடல்களை மீனவர் மற்றும் படையினருக்கு இடையே மேற்கொண்டு சில முடிவுகளை எடுத்தபோதிலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் போது சில சிக்கல்கள் தோன்றுகின்றதாக மீனவர்கள் கூறுகின்றனர்.

"கலந்துரையாடலின் போது நேவி ஆபிசர்கள் அதனை அவ்வாறு செய்கிறோம் என கூறினாலும் .......கரையில் பொயின்டில் இருக்கும் படையினர் சொல்லுகிறார்கள் அவர்களுக்கு அவ்வாறு ஓடர் வரவில்லையென்று...அப்போது நாங்கள் திரும்பி வருவோம். கடந்த மாகாண சபை தேர்தலுக்கு நான்கு நாளைக்கு முன்னர் எங்களுக்கு இரண்டு அனுமதி கிடைத்தது. ....நாங்கள் மிகவும் சந்தோஷ த்தில் இருந்தோம். ஆனால் தேர்தலன்று காலை துறைமுகத்தின் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலொன்று வெடித்தது. ...அடுத்த நாள் மீண்டும் அந்த தடை அமுலுக்கு வந்தது. அரசாங்கம் தேர்தலில் வெற்றிப்பெற்றது. அமைச்சர்கள் மீண்டும் கொழும்புக்கு சென்றுவிட்டார்கள். நாங்கள் இன்னும் அதே நிலையில் தான். ...." இவ்வாறு கூறுவது சிரிமாபுர பிரதேசத்தில் வசிக்கும் பெயர் சொல்ல விரும்பாத ஓர் மீனவராவார். அவர் மேலும் கூறியதாவது இந்த கப்பல் வெடிப்பினால் அநேக மீனவர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாம். காரணம் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் நிறுத்தப்பட்டிருந்த இந்த கப்பலை புலிகள் திட்டமிட்டு தாக்குவது இலகுவானதல்ல

என்று கூறுகின்றனர்.

எவ்வாறெனினும் இந்த தாக்குதலை தாங்களே மேற்கொண்டதாக புலிகள் அதற்கு மறுநாள் அதாவது 2008 மே 09ம் திகதி தமிழ் நெட் இணையத்தளத்தில் அறிக்கை வெளியிட்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருந்தால் அரசும் கடற்படையினரும் மீனவர்கள் தடை தொடர்பிலான முறைப்பாட்டை அலட்ச்சியப்படுத்தியிருக்க கூடும்.

இது சுறா மீன் பிடிக்கின்ற காலம்..... மீனவர்கள் நன்றாக சம்பாதிக்கின்ற காலம்....நாங்கள் நிலாவெளி மற்றும் புறாமலை ஆகிய இடங்களுக்கு சென்று மீன் தீணியை தேடி வந்துதான் சுறா பிடிக்கச்செல்வோம். அதாவது சுறா பிடிப்பதற்கான தீணிகள் புறாமலை எனும் இடத்தில் தான் கிடைக்கின்றன..... ஆனால் இப்போது எங்களுக்கு புறாமலைக்கு செல்ல அனுமதி இல்லை. இந்த தடையை நீக்கித் தருமாறு நாங்கள் மிக தாழ்மையாய் கடற்படையினரிடமும் அரசாங்கத்திடமும் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு சொல்பவர் திருக்கடலூர் ஆனந்த மூர்த்தி

இப்போதைக்கு திருகோணமலை பிரதேசத்தில் பெரும்பாலான மீனவர்களின் வீட்டில் மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி துண்டிக்கப்பட்டுள்ளதோடு அவர்களுக்கு சொந்தமான அநேக நகைகளும் வங்கிக்கு சொந்தமாகிவிட்டன. அவர்கள் தங்கள் நகைகளை அடகு வைத்ததன் நோக்கம் சுறா மீன் இலாபத்தில் அவற்றை மீண்டும் பெறலாம் என்ற நம்பிக்கை தான். அவர்களுடைய அந்த தாழ்மையான எதிர்ப்பார்ப்பு இப்போது அவர்கள் பிறந்த வீட்டிலேயே மரித்து போயுள்ளது.

எங்கள் வீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்டு அழிந்துபோயுள்ளன. அதைப்பார்த்து நாங்கள் துவண்டுவிடவில்லை. ஏனென்றால் எங்களுக்கு தெரியும் சூறன் கிடைக்கின்ற காலத்தில் எங்கள் கணவர்மார் தோணி நிறைய மீன் கொண்டு வருவார்களென்று....ஆனால் இப்போது சுறா பிடிப்பதைவிட்டு அவற்றுக்கான தீணியை பிடித்துக்கொண்டு வரவும் எங்களுக்கு அனுமதியில்லை. தங்க நகைகள் வங்கிக்கு சொந்தமாகியுள்ளன. இப்போது வீடுகளில் மின்சாரத்தையும் வெட்டிவிட்டார்கள்....மிகுதி இருப்பது எங்கள் உயிர் மாத்திரம் தான்......." திருகோணமலை ஹர்தாச தோட்டத்தில் வசிக்கும் மீனவரான செல்வராஜாவின் மனைவியான திருமதி ஜனார்த்தன் தனது சோகத்தை இப்படி விளக்கினார்

எங்கள் வீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்டு அழிந்துபோயுள்ளன. அதைப்பார்த்து நாங்கள் துவண்டுவிடவில்லை. ஏனென்றால் எங்களுக்கு தெரியும் சூறன் கிடைக்கின்ற காலத்தில் எங்கள் கணவர்மார் தோணி நிறைய மீன் கொண்டு வருவார்களென்று.... ஆனால் இப்போது சுறா பிடிப்பதைவிட்டு அவற்றுக்கான தீணியை பிடித்துக்கொண்டு வரவும் எங்களுக்கு அனுமதியில்லை. தங்க நகைகள் வங்கிக்கு சொந்தமாகியுள்ளன. இப்போது வீடுகளில் மின்சாரத்தையும் வெட்டிவிட்டார்கள்....மிகுதி இருப்பது எங்கள் உயிர் மாத்திரம் தான்......."

என்னுடைய கணவர் முன்பு ஓர் மீன் முதலாளி. இம்முறை பிள்ளைகளுக்கு புத்தகம் வாங்கிகொடுத்தது வீட்டிலிருந்த வலயல்களை ஈடுவைத்துதான். எங்களுக்கு தொழில் இல்லாமல் போய் இரண்டு வருடங்களாகின்றன. பிரச்சினை காலங்களில் மற்றைய தமிழர்கள் போல் நாங்களும் எஞ்சின்களை விற்று விட்டு இந்தியாவுக்கு போனோம்.....பின்னர் பிரச்சினை குறைந்த பின்னர்தான் திரும்பி வந்தோம்...எப்படி சாப்பிட்டு குடிக்கிறோம் என எங்களுக்கு மட்டும்தான தெரியும். நான் கடயப்பம் செய்து விற்றுதான் வீட்டு செலவை கவனிக்கிறேன்......" திருக்கடலூர் லக்ஷ்மி தேவி அவ்வாறு கூறுகிறார்.

மீனவர் அடையாள அட்டையை பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதென சிரிமாபுரத்தில் வசிக்கும் ஈ.ஏ.பி பிரேமஜயந்த எனும் மீனவர் தெரிவிக்கின்றார். அதாவது மீனவர் அடையாள அட்டை பெறுவது தொடர்பில் இதுவரையிலிருந்த விதிமுறைகள் முற்றிலும் மாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

"முன்பு மீனவர் கூட்டத்தில் அனுமதி பெற்று கிராம சேவகர் அத்தாட்சி செய்து மீனவர் பணியகத்திற்கு கொடுப்போம். ஆனால் இப்போது மீனவ கூட்டம் அனுமதித்து அதனை சமாதான நீதவான உறுதிசெய்து, கிராம சேவகர் உறுதிசெய்து, பொலிஸார் உறுதிசெய்து, மீனவர் பணியகம் உறுதிசெய்து பின்னர் கடற்படையினரிடமும் கொண்டு போக வேண்டும;...உண்மையிலேயே இது கஷ்டம் ....விசேடமாக தமிழர்களுக்கு இது மிகவும் கஷ்டம;....

அதே போல் சில சிங்கள மீனவர்களுக்கு மாத்திரம் தான் கொட்பே மீனவர் பணியகத்திற்கு செல்ல முடியும். ஏனென்றால் அங்கே கடற்படை தளங்கள் இருப்தால்.....மற்றவர்கள் இவர்களுக்கு ஏதாவது கொடுத்துதான வேலைகளை செய்துகொள்ள வேண்டும். சிலர் இதனை வருமானம் ஈட்டும் ஒரு வழியாக ஆக்கிக்கொண்டுள்ளனர். இதனால் மீனவர்கள் இன்னும் பாதிக்கப்பட்டுள்ளனர்....அவர் தொடர்ந்தும் கூறினார்.

திருனோணமலை உள்ளார்ந்த துறைமுக பகுதி அதிக மீன் வளத்தை கொண்டிருந்தாலும் கடந்த காலங்களில் கடற்படையினரால் அப்பகுதி முற்கம்பிகளினால் வேலி அடித்து மறைக்கப்பட்டது. சீனத்துறைமுக கொட்பே துறைமுகத்தின் பரம்பரைபரம்பரையாக பாரியவலை போடும் மீனவர்களுள் ஒருவரான எட்வின் அப்புஹாமி இது ஓர் நியாமற்ற தீர்மானம் என தெரிவித்தார்.

எனது முழு குடும்பமும் இந்த வலையினால் தான் வாழ்ந்தனா;......எனக்கு வேறு தொழிலும் தெரியாது.....நான் இவ்வலையை போடுவது களப்பில் தான்.... துறைமுக பகுதியில் அல்ல....மற்றது வலை இழுப்பதும் கரையிலிருந்துதான்... கடற்படை பொயின்ட் அந்த இடத்தில் தான் உள்ளது ...நாங்கள் கரைக்கு வருவது பாஸ் மற்றும் அடையாள அட்டையை காட்டிவிட்டுதான;..... தேர்தல் காலங்களில் நாம் இதனை அமைச்சருக்கு சொன்னோம்.....அவர் அதனை கவனிப்பதாகக் கூறினார். ... தேர்தலின் பின் அவர் இந்தப் பக்கம் வரவேயில்லை.... ஷ ஷ

மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் முதலமைச்சர் சிவநேச் துறை சந்திரகாந்தன் தலைமையில் நாம் திருகோணமலை துறைமுக பாதையில் அமைந்துள்ள பரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டபோது பிரதேசத்திற்கு பொறுப்பாளர் அத்மிரால் ஆனந்த பீரிஸ் அவர்கள் இத்தடைகளை நாம் மீனவர்களை ஒடுக்குவதற்கு போடவில்லை மாறாக நாட்டின் பாதுகாப்பிற்காகவே என குறிப்பிட்டார்.

எங்களுக்கு தெரியும் இந்த தடையினால் மீனவர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர் என்று....இப்போது வடக்கில் நடக்கும் யுத்தத்திற்கு பொருட்கள் பரிமாற்றம் கடலினூடாகவே நடக்கின்றன.....ஆகவே நாம் இவ்வாறு கடமையாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இருப்பினும் நாங்கள் கலந்துரையாடல்கள் மூலம் தீர்வுகளை காண முயற்சிக்கின்றோம;..... காலை இரண்டு மணிக்கு கடலுக்கு செல்ல இன்னும் அவகாசம் இல்லை.... நான் மீனவர்களை வெகு விரைவில் பரிசீலித்துவிட்டு அனுப்புமாறு கட்டளையிட்டுள்ளேன்.



இருப்பினும் இன்னும் சில காலங்களில் இந்நிலை மாறிவிடும் என நினைகின்றோம். மீனவர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அதனை மீனவர் கூட்டமைப்பினூடாக எங்களுடன் கதைக்க முடியும;..... செய்யக்கூடிய எல்லாவற்றையும் நாங்கள் கட்டாயமாக செய்வோம;... ...இது தொடர்ந்தும் இருக்க போகின்ற நிலமை அல்ல....இப்போது இருக்கின்ற நிலமையில் உற்புற துறைமுகத்தில் மீன்பிடிக்க அனுமதியில்லை. அதனை அந்த மீனவர்களுக்கு தெளிவாக சொல்லியுள்ளோம;... நாம் அந்த பிரதேசத்தை துறைமுக பாதுகாப்பு கருதி அதிஉயர் பாதுகாப்பு வலயமாக மாற்றியுள்ளோம;....."என்று தனது தரப்பு நியாயத்தை விளக்கினார்.

**வீர படையணிகள் கிழக்கை மீட்டு இரண்டு வருடங்களாகின்றன. ஆனாலும் கிழக்கை மீட்ட பலனை மீனவர்கள் அனுபவிக்கவில்லை... யுத்தம் முடியும் வரை காத்திருந்த மக்களுக்கு இன்னும் வெறுமனே காலம் கடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது... தேர்தல் காலங்களில் வரிசை தளராது வந்த மந்திரிகளை இப்போது காணவே கிடைப்பதில்லை... அவ்வப்போதேனும் வந்து போவது தேச மீன் கட்டடைப்பு அமைச்சர் சுசன்த புஞ்சிநிலமே மாத்திரமே. ஆனால் அவருக்கு மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் அவ்வளவு தெளிவில்லை...**

திருக்கடலூர் விபுலானந்த மீனவர் கூட்டமைப்பின் தலைவர் ரொஷான் மஞ்சுல:

“எங்களுக்கு இப்போது கோணஸ்வர கோட்டையிலும் புல்மோடை பிரதேசத்தில் 05 கிமி வரையிலான பிரதேசத்திலும் தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பகுதியில் மீன்கள் 06 மாதத்திற்கு மாத்திரமே கிடைக்கும்..... பின்பு அப்பகுதியில் மீன்கள் பெருகும் வரை கோணஸ்வர கோட்டையிலும் லங்கா படுனயிலும் நாம் மீன் பிடிப்போம்..... ஆனால் இப்போது அப்பகுதியில் அதாவது கீழ் கடலில் (ருகுனு கடல்) மீன் பிடிக்க அனுமதியில்லை.... ஆனால் இதனை விட பாதுகாப்பற்ற வாழைச்சேனை, மட்டக்களப்பு, அம்பாறை மட்டுமல்ல யாழ்பாணத்திலும் தொழில் செய்ய அனுமதி வழங்கியுள்ளார்க்ள. நாங்கள் அரசிடம் கேட்பது நிபந்தனைகளுக்கு அமைய ருகுனு கடலில் தொழில் செய்ய இடமளிக்க வேண்டுமென்பதாகும்....
நாம் தேசிய பாதுகாப்பு கருதி படையினர் இடும் எந்த நிபந்தனைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்ததில்லை.....ஏனென்றால் அர்கள் புண்ணியத்திலேயே நாங்கள் நிம்மதியாக வாழ்கிறோம்.”

ஒரு நாள் கப்பல்களுக்காக ரேடியோ தொடர்பு சாதனங்கள் கட்டாயப்படுத்தப்பட்டமை பிரதேசத்தில் மீனவர் படகு உரிமையாளர்ககளுக்கு பெரிதும் பிரச்சினையானது. அவர்கள் அந்த தொடர்பு சாதனம் 02 இலட்சம் ரூபாவாகின்றபடியால் அது தங்களுக்கு இயலாத காரியம் என வருத்தம் தெரிவிக்கின்றனா;....

ஆனால் படையினர் பத்து இலட்சம் கொடுத்து வல்லம் வாங்கும் இவர்களுக்கு இது ஒரு பிரச்சினை அல்ல என்று கூறுகின்றனர்..
“ நாங்கள் வல்லங்கள் வாங்குவது கையில் காசு வைத்துக்கொண்டு அல்ல....மற்றது இவை நாம் இன்று நேற்று வாங்கியவைகளல்ல..... எங்களுக்கு கடந்த காலங்களில் தொழில் இருந்திருந்தால் உண்மையிலேயே இரண்டு இலட்சம் பெரிய விடயமும் அல்ல... ஆனால் இப்போது இரண்டு இலட்சம் என்பது பத்து இலட்சம் போன்றது .மேல்.. திருகோணமலை சமுதாகம பிரதேசத்தின் வல்ல உரிமையாளரான திரு. ஆனந்த அவர்கள் அவ்வாறு கூறினார்.

ஒரு நாள் வல்லங்களுக்கு ரேடியோ இயந்திரம் வாங்குவது கடினமென எங்களுக்கு தெரியும். இது தொடர்பில் நாங்கள் வங்கிகளிடம் பேசி வருகிறோம்...

வீர படையணிகள் கிழக்கை மீட்டு இரண்டு வருடங்களாகின்றன. ஆனாலும் கிழக்கை மீட்ட பலனை மீனவர்கள் அனுபவிக்கவில்லை... யுத்தம் முடியும் வரை காத்திருந்த மக்களுக்கு இன்னும் வெறுமனே காலம் கடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது... தேர்தல் காலங்களில் வரிசை தளராது வந்த மந்திரிகளை இப்போது காணவே கிடைப்பதில்லை... அவ்வப்போதேனும் வந்து போவது தேச மீன் கட்டடைப்பு அமைச்சர் சுசன்த புஞ்சிநிலமே மாத்திரமே. ஆனால் அவருக்கு மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் அவ்வளவு தெளிவில்லை...மீனவர் தொழிலுக்கு தடைகளை விதித்துள்ள அரசிடம் அவர்கள் கேட்டுக்கொள்ளுகின்ற ஒரே விடயம் என்னவென்றால் தங்களுடைய இந்த இராகுகாலம் நிறைவேறும் நாளை தங்களுக்கு அறியத்தரும்படியாகும;.....

**மங்கலனாத் லியனாரச்சி ~ திருகோணமலை**

# தாய்மார் வெளிநாடு செல்வதால் பாதிப்புக்குள்ளாகும் பிள்ளைகள்



வடமத்திய மாகாண
சிறுவர் புனர்வாழ்வு
பணிப்பாளர்
கே.பி.டி.என் முதுகல

மத்திய கிழக்கு பகுதியிலே பணிபுரியும் ஒரு தாய் தன் வயது வந்த மகளை பார்ப்பதறாகாக தாய்நாடு திரும்ப கனவு கண்டாள். இருப்பினும் தன் மகளிடமிருந்தோ கணவரிடமிருந்தோ ஓர் தொலைபேசி அழைப்பும் இல்லாததால் அவள் தினம் தினம் செத்துப் பிழைத்தாள். தன் மகளுக்கு பொம்மைகள் மற்றும் விதவிதமான உடைகள் அனைத்தையும் தாங்கிய வண்ணம் அவள் தாய்நாட்டிற்கு திரும்பினாள். கட்டுநாயக்காவிலிருந்து மதவாச்சியை நோக்கி பயணித்த அவள் தான் கொண்டு வந்த அனைத்து பொருட்களையும் பிள்ளைக்கு கொடுத்தும் அவள் அதனை ஏற்று குதூகளிப்பதையும் கற்பனையில் கண்ட வண்ணம் சென்றாள்.

வீட்டினருகே வந்த அவளுக்கு எதிர்ப்பாராத அதிர்ச்சி காத்திருந்தது. வீடு பாலடைந்திருந்தது. உரத்த சத்தமிட்டு கூப்பிட்டாலும் சத்தமிட்டாலும் எவரும் அவளுக்கு பதிலளிக்கவில்லை. எவரும் அவளுக்கு அவ்வீட்டை திறந்து கொடுக்கவும் இல்லை. அவ்வாறு செய்வதற்கு வீட்டில் யாரும் இருக்கவில்லை. கணவர் காலமாகிவிட்டார். பிள்ளையோ வேறெங்கோ வசிக்கிறது.

“அய்யோ என் பிள்ள” என்று தாய் கதறியழுதாள“

“பயப்பட வேணாம் பிள்ளையும் குழந்தையும் பாதுகாப்பாக நல்லா இருக்காங்க” என ஓர் அயலவர் கூறினார். பதினைந்து வயது நிரம்பிய மகள் ஓர் அனாதை இல்லத்தில். அந்த இல்லத்தில் அவள் ஓர் தாயும் பிள்ளையுமாக இருந்தாள். அதாவது அவளுக்கு ஓர் குழந்தையும் இருந்தது. அவர்கள் ˙. மகளுக்கு கொண்டு வந்த பரிசில்களை இப்போது பேத்திக்கு கொடுக்க வேண்டியுள்ளது.

சோகத்துடன் அவ்வில்லத்தின் அதிகாரிகளை சந்தித்த தாய் தன் குழந்தைகளை கூட்டிக்கொண்டு வேறு பகுதிக்கு சென்று விட்டாள்.

வடமத்திய மாகாண சிறுவர் புனர்வாழ்வு அமைப்பு இவ்வாறான அநேக சம்பங்களினால் சலித்துப்போயுள்ளது. அங்கு பணிப்பாளராக கடமையாற்றும் திரு. பி.டி.என் முதுகல தங்கள் நிறுவனம் இவ்வாறான நிகழ்வுகளை குறைக்கும் வகையில் செயல்படுகின்றதென தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துக்களை பணிப்பாளர் பின்வருமாறு தெரிவித்தார்.

“திருமணமாகும் வயது தொடர்பில் காணப்படும் சட்ட ரீதியான பிரச்சினையே இவற்றுக்கு காரணமாக உள்ளது. 16 வயதுக்கு குறைவாக எந்த ஓர் பெண் பிள்ளையுடனும் விரும்பியோ விரும்பாமலோ உறவு வைத்துக்கொள்ள முடியாது. அவ்வாறாயின் அது கற்பழிப்பாக கருதப்படும்.

இருப்பினும் 16-18 வயதிற்கிடைபட்பட்ட பிள்ளைக்கு விருப்பத்துடன் பாலுறவில் ஈடுபடலாம். மேலும் ஓர் ஆணுடன் ஒன்றாக வாழவும் சட்டத்தில் அவகாசம் உண்டு. இங்கு சட்டரீதியாக திருமணம் முடிக்க மாத்திரமே அனுமதி இல்லை. திருமணத்தை 18 வயதிற்கு பிறகு மாத்திரமே பதிவு செய்ய முடியும்.

இந்நிலை எங்கள் கிராமத்து மக்களுக்கு விளங்குவதில்லை. இருக்கும் மூதாதையர்கள் கூறுவர் “நாம் 14 வயதில் கட்டினோம். ஒரு பிரச்சினையும் இல்லை” இவ்வாறு கூறுவதோடு மாத்திரமல்லாது பலவேளைகளில் பலவந்தமாக திருமணங்களும் நடைபெறுகின்றன. 16 வயதிற்கு குறைவானால் அங்கே ஆணுக்கு பெண்களுக்கெதிரான வன்முறை எனும் பேரில் தண்டனை அனுபவிக்க நேரிடும். 16-18 இடைப்பட்ட காலத்தில் திருமணம் முடிக்க இயலாதெனினும் ஒன்றாக வாழ முடியும். ஆனால் திருமணமாகாமல் குழந்தை பிறந்த பின்னர் கணவர் கைவிட்டால் பெண்ணுக்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. அதன்போது தகப்பன் இவர் என நிரூபிக்கவும் முடியாது. மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடரவும் டி.என்.ஏ பரிசோதனை செய்து விளக்கமளிக்கவும் வேண்டிய கட்டாயம் ஏற்படும். குறித்த நபரின் விருப்பம் இல்லாமல் டி.என். ஏ பரிசோதனை செய்யவும் முடியாது. ஆகவே இவ்வாறான காரியங்களினால் அனேக சிரமங்கள் உள்ளன.

ஓர் தூர பிரதேசத்திலிருந்த பிள்ளைக்கு வயது 17. தாய் வெளிநாடு சென்றுவிட்டார். ஓர் ஆணுடன் தொடர்பு ஏற்பட்டு பிள்ளை பிறந்த பின்னர் அவள் கைவிடப்பட்டு விட்டாள். பிள்ளையை வளர்க்க முடியாத நிலையில் அவள் எங்கள் அனாதை இல்லத்திற்கு கொடுத்து விட்டாள்.

முக்கியமாக திருமண வயது தொடர்பிலான சட்டம் மிக விரைவில் கவனத்திற்குட்படுத்தப்பட்டு மாற்றம் பெற வேண்டுமென நான் நினைக்கிறேன்.

சட்டம் தெளிவாக இல்லாத படியினால் இன்னும் அநேக நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. தற்கொலை, கருச்சிதைவு, மன அழுத்தம், கல்வி பாதிக்கப்படல், பிறப்பு சான்றிதழ் பெற்றுக்கொளலதில் சிரமம் என்பன இதனால் ஏற்படுகின்றன. எமக்கு வருகின்ற கண்கானிப்பு வழக்குகளில் 35% 18 வயதிற்கு குறைவானவர்கள் சம்பந்தப்பட்டதாகவே உள்ளன.

கேள்வி: நீங்கள் நினைக்கின்ற வகையில் மாற்றப்பட வேண்டியது அந்த சட்டம் மாத்திரமா?

பதில்: பிள்ளைகள் சட்டத்திற்கு அமைய 18 வயதிற்கு குறைவான ஒருவரும் அதற்கு கூடிய வயதுடைய ஒருவரும் ஒன்றாக பயணிக்க முடியாமல் இருக்கும். ஆனால் இன்று எல்லா வயதுடையவர்களும் ஒன்றாகவே சிறைச்சாலை ஊர்தியில் பயணிக்கின்றனர்.

பொலன்னறுவ பகுதியில் ஏற்பட்ட ஓர் சம்பவத்தை உதாரணமாக தர விரும்புகின்றேன் பிள்ளை பாதிப்புற்றவர். தகப்பன் குற்றவாளி. தகப்பன் சிறையிலடைக்கப்பட்டார். பிள்ளை புனர்வாழ்வு நிலையத்திலிருந்து இம்முறை சாதாரண தர பரீட்சை எழுத சென்றது. பிள்ளையை நீதிமன்றத்திற்கு அனைவருடனும் ஒன்றாகதான் அந்த வண்டியில் அழைத்து செல்வார்கள். பின்னர் குற்றவாளியான தகப்பன் பிணையில் வீடு சென்றார். அவர் வீட்டிலிருந்து பொது போக்குவரத்தில் நீதிமன்றத்திற்கு சுதந்திரமாக செல்வார். பாதிக்கப்பட்டவரான அப்பிள்ளை இன்னும் சிறைச்சாலை வண்டியிலே பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வயது கூடிய கைதிகளுடன் இருந்த குழந்தைகளுக்கு ஓர் போதைப்பொருள் விற்பனையாளர்

அறிமுகமானாள். இப்பிள்ளைகளுக்கு சிறுவர் இல்லத்தில் இருந்து தப்பித்து வரும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. பிள்ளைகள் அவ்வாறே செய்தனர். நல்ல வேளை அச்சிறுவர் இல்லத்தின் அதிபர் 119 இலக்க தொலைத்தொடர்பு ஊடாக கொடுத்த முறைப்பாடடால் சிறுவர்கள் அப்பெண்ணிடம் செல்வதற்கு முன்பே கண்டு பிடிக்கப்பட்டனர்.

கேள்வி: பிள்ளைகளை நீதிமன்றத்திற்கு அழைத்து செல்ல அவ்வூர்த்தி தவிர்ந்த வேறு வாகனங்கள் இல்லையா?
பதில் : வாகனம் இல்லாததுதான் பிரச்சினை. அது தொடர்பில் நாங்கள் கூலிக்காவது வாகனம் ஒன்றில் இவர்களை அழைத்து செல்ல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.
கேள்வி: உங்கள் கருத்துப்படி பிள்ளைகளின் வழக்குகளை விசாரிப்பது எவ்வளவு தூரம் சிறந்தது?
பதில்: சில வழக்குகள் நீதிமன்றத்தில் கேட்கப்பட உகந்ததல்ல என நான் நினைக்கிறேன். அதற்கமைய இவ்வருடம் ஓர் நாளிலோ அல்லது அரை நாளிலோ வழக்குகளை விசாரிக்க நீதிபதி தயாராகவுள்ளார்.
கேள்வி: பிள்ளைகள் தொடர்பான வழக்குகளை விரைவில் முடிக்க இயலாதா?
பதில்: எங்கள் முயற்சியும் அதுதான். வடக்கு கிழக்கை சேர்ந்த மக்கள் எமது இல்லங்களில் இருக்கின்றனர். பயங்கரவாத குழுவில் இருந்தவர்கள் மற்றும் சவர்க்காரம் ஆகிய சிறிய திருட்டுகள் செய்தவர்கள் வரை இங்கே இருக்கின்றனர். 30-35 பேர் வரையில் இருந்தவர்கள் தற்போது 4-5 வரையில் குறைந்துள்ளனர். குறிப்பிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு கதைத்து அவர்களை விடுவிடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கேள்வி: இது தொடர்பில் பொலிஸாரின் பங்கு என்ன?
பதில்: இது தொடர்பில் பேசும் போது பொலிஸாரும் பல திருத்தங்களை செய்ய வேண்டும். சட்டத்திறகு அமைவாக பிள்ளை கைதுசெய்யப்பட்டால் பிள்ளை பராமரிப்பு நிலையத்திற்கு அவர்கள் உடனடியாக அறிவிக்க வேண்டும். பொலிஸார் சட்ட ஒழுங்கை மாத்திரமே பார்ப்பர். சிறுவர் அமைப்புகள் சமூக கண்ணோட்டத்தில் அதனை நோக்குகின்றன அநேக நேரங்களில் சிறைச்சாலைகளில் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. குற்றம் சுமத்தப்பட்டவரும் இதனுள் இருப்பார். அவ்வாறான விடயங்கள் குறித்து நாம் கலந்துரையாடி வருகிறோம். அது தொடர்பில் கடந்த காலங்களில் சில கசப்பான அனுபவங்களுமுள்ளன. அனாதரவற்று பீ அறிக்கையினால் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட ஓர் இளவயது பிக்குவை நாம் பொறுப்பெடுக்க வேண்டியாயிற்று. அந்த பிக்குவுக்கு தேவையான வசதிகளை செய்ய முடியாததால் நாம் அவதிக்குள்ளானோம். தவறு இழைத்தது பொலீஸார். குற்றவாளிகளை நீதி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் ‘ஏ’ அறிக்கையில் ‘ஏ up’ மாறுகின்றதினால் ஏற்படும் தவறுகளை தவிர்க்கின்ற வகையிலான நடவடிக்கைகளை குறித்து உயர் அதிகாரிகளுடன் கலந்துரையடால்களை மேற்கொண்டோம். நான் நினைக்கின்ற வகையில் சிறுவர்களின் வழக்குகளை தீர்க்க தனியான நீதிமன்றம் இருத்தல் மிக அவசியமானதாகும்.
கேள்வி: வடமத்திய மாகாணத்தில் சிறுவர் துஷ்பிரயோக புள்ளிவிபரங்களை பார்க்கும் போது உங்களால் என்ன கூறமுடியும்?
பதில்: சாதாரணமாக அனுராதபுரத்தில்வருடாந்தம் இவ்வாறான நிகழ்வுகள் 275 பதிவாகின்றன். பொலனறுவையில் இவ்வெண்ணிக்கை 75 ஆக காணப்படும். ஆனால் இவ்வருடம் அனுராதபுரத்தில் பதிவுகள் 300 ஐ தாண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இதற்கு காரணம் நாம் மக்களை அறிவூட்டியபடியால் அவர்கள் பயமின்றி முன்வந்து அறிக்கையிடுகின்றனர். கிடைக்கின்ற முறைப்பாடுகள் புதியவைகளல்ல. அவற்றில் அநேகமானவை பழைய சம்பவங்கள். இதன் மூலம் எதை விளங்கிக்கொள்கிறோம் என்றால் மக்கள் ஒழுங்கான விளக்கம் இல்லாதபடியினால் அவற்றை மறைத்து வைத்து செயல்பட்டுள்ளனர் என்பதாகும். ராஜாங்கனய நொச்சியாகம தபுத்தேகம கல்நேவ விலச்சிய மற்றும் மதவாச்சி ஆகிய இடங்களிலிருந்து அதிகளவிலான முறைபாடுகள் கிடைக்கின்றன.

கேள்வி: தாய்மார் வெளிநாடுகளுக்கு செல்வது இதற்கான பிரதான காரணமா?
புதில்: அது மட்டுமல்ல. தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு செல்வதால் மாத்திரம் ஏற்படும் முறைபாடுகள் குறைவு எனலாம். அதற்கும் மேலாக தாய் தந்தை இருக்கும் போதே நம்பிக்கையுடைய ஒருவரினால் பாதிப்புக்குட்படல் கொடுரமானதாகும்.
கேள்வி: இது தொடர்பான புள்ளி விபரங்களை பெற்றுக்கொள்வது எவ்வாறு?
பதில்: ( அந்த காரியங்களை நாங்கள் செய்து கொண்டு போகிறோம். பிரதேச செயலக பிரிவு மற்றும் கிராம சேவகர் பிரிவு ரீதியிலாக 05 வருடத்திற்குள்ளான விபரங்களை பெறும் வகையிலாக முறைமையொன்று தயார்ப்படுத்தப்பட்டுள்ளது.
கேள்வி: அவ்விபரங்களை அச்செயல்களுக்கான காரணங்களைக் கண்டறிய பயன்படுத்தினீர்களா?
பதில்: அது மாத்திரமல்ல சம்பவத்தை ஒழுங்காக ஆராய்து அறிவூட்டல் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை உரிய இடத்திற்கு வழிநடத்தல் என்பவற்றையும் செய்துள்ளோம். காலத்திற்கு ஏற்ப சம்பவங்களை தொகுக்கலாம். அறுவடை காலங்களில் விவசாய நிலப்பிரதேசங்களில் அநேக சம்பவங்கள் நடக்கலாம். காரணம் பிள்ளையை நம்பிக்கையான இடத்தில் அல்லது தனியான இடத்தில் விட்டுவிட்டு பெற்றோர் வேலைக்கு சென்றுவிடுவார். அவ்வாறான விடயங்களை அறிந்து அறிவூட்டுவதன் மூலம் இவ்வாறான விடயங்களை தவிர்க்கலாம்.
கேள்வி: இக்காரியங்களில் ஈடுபட போதியவு ஊழியர்கள் உள்ளனரா?
பதில்: வடமத்திய மாகாணத்திற்கு மட்டும் 09 புனர்வாழ்வு ஊழியர்கள் உள்ளனர். வதிவிட நிகழ்ச்சிகளுக்கு சென்றால் ஒரு சிலர் வேலை செய்வது மிகவும் கடினம். புதியவர்களை இணைத்துக்கொள்ள சட்ட அவகாசம் இல்லை. மேலும் வேறு ஊழியர்களை சோத்தல் அல்லது சேர்த்துக்கொள்ளல் தொடர்பில் பிரதேச சுகாதார அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.
பதில்: : புனர்வாழ்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு விடயம் மிகவும் பரவலான விடயமாகும் பிரதேச சபைக்கு தனது அதிகாரத்தை பாவித்து சிறுவர் இல்லங்கள் தொடர்பில் நிபந்தனைகளை வகுக்க முடியும். அதற்கு நாம் கட்டுப்படவேண்டும். இல்லாத வளங்களை பெற்றுக்கொள்ள இவ்வாறான செயற்பாடுகளினூடாக இயலுமாயிருக்கும். தன்னார்வ நிறுவனங்கள் ஒரு பிரதேசத்திற்கு எவ்வளவு பணத்தை அனுப்பினாலும் வேலைகள் ஒழுங்கில்லை. தேவையான இடத்திற்கு பணம் கொடுக்கப்படுவதில்லை. மாவட்ட சிறுவர் அமைப்பு எனும் நிறுவனம் குறித்தும் எனக்கு திருப்தியில்லை. இவை தொடர்பாக சட்டங்கள் கொண்டு வரப்படவேண்டும். நாம் சில நிறுவனங்ளோடு புரிந்துனர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள தயாராகவுள்ளோம். அதற்கு காரணம் சிறந்த முறைமையொன்றை அமைப்பதேயாகும். அப்போதுள்ள மிகவும் கடினமான விடயம் பலரின் கொள்கைகளை மற்றுவதும் புதிய தயாரிப்புகளுக்கு இடம் பெற்றுக்கொள்ளலுமாகும்.

**சரத் மனுல விக்ரம**
**– அனுராதபுரம்**

# இயல்பான சூழலை ஏற்றுக் கொள்ளல்

## CHA இன் சுற்றாடல் வேலைத்திட்டம்

### பாரம்பரிய பங்குடமைகள்-நிலத்துடனான எமது உறவுகள்

உலகளாவிய ரீதியாக நகரமயமாக்கலை நோக்கிய பாரிய மாற்றங்களை கடந்த அரை நூற்றாண்டுகளில் அவதானிக்க முடிகின்றது.இது மக்கள் தாம் வாழ்ந்த நிலத்தோடு பாரம்பரியமாக அவர்களுக்கு இருந்து வந்த நெருக்கமான மிகப் பழமையான உறவுகளை பறித்துச் சென்றுவிட்டது.இலங்கையின் சனத்தொகையில் 70% த்துக்கு மேற்பட்ட மக்கள் கிராமப் புறங்களில் வாழ்பவர்கள்,பெரும்பாலும் இவர்கள் விவசாய உற்பத்திகளில் ஈடுபடுபவர்கள். நிலத்தோடும் அதன் சூழல் அமைப்போடும் நெருங்கிய உறவு இங்கு காணப்படுகின்றது.இது நாடு முழுவதும் ஒரே சீரான தன்மை கொண்டதல்ல என்பதை வித்தியாசமான இன மற்றும் சமயப் பார்வைகள் உறுதி செய்கின்றன. எவ்வாறாயினும் இயந்கையின் செயற்பாட்டுரீதியான மற்றும் பொருளாதார ரீதியான மனொபாவம் இன்னும் மங்கிப் போய்விடவும் இல்லை.

இலங்கையில் நிலத்தில் தொழில் புரிவதிலும்,மேற்பார்வை செய்லதிலும் ஆணும்,பெண்ணும் பாரம்பரியமாக ஆக்கபூர்வமான பங்குடமைகளை ஏற்படுத்தியுள்ளனர். அவர்களின் இயல்புகளுக்கேற்ப இந்தப் பங்களிப்புக்களின் பெறுமதியானது இயற்கையின் அடிப்படையில் பெரிதும் பாராட்டத்தககதாகவும்,சமூகங்களுக்கு இடையில் செயற்பாட்டளவில் சமநிலையை உண்டாக்குவதாகவும் அமைந்துள்ளது.அரிசி இலங்கையில் மிக நீண்ட காலமாக ஒரு பிரதான உணவுப் பொருளாக இருந்து வருகின்றது.அந்த வகையில் நெல் உற்பத்தியானது இந்தத் தொழிலாளர் பிரிவை எடுத்துக்காட்ட சிறந்ததோர் உதாரணமாகத் திகழ்கின்றது. நிலத்தை தயார்படுத்தி அதாவது உழுது,விதை தூவும் வேலைக்கு ஆண்கள் பொறுப்பாக உள்ளனர். அதே போல் பசளைஇடுதல்,மற்றும் கிருமி நாசினி தெளித்தல் என்பனவும் இவர்களின் பொறுப்பாக உள்ளது. பெண்கனால் விதைகளைத் தூவுதல்,பெண் தொழிலாளர்களை ஏற்பாடு செய்தல்,நாற்றுகளைப் பிடுங்கி அகற்றுதல் போன்ற தொழில்களில் பெண்கள் ஈடுபடுகின்றனர்.பயிர்கள் முதிர்ச்சியானதும் ஆண்கள் தான் கதிரடித்தல் மற்றும் உபகரணங்களை கொண்டு புடைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர்.பெண்கள் பயிர்களை சுத்தம் செய்தல்,உலரவிடுதல்,சந்தைக்கு அனுப்புவதற்கு முன் களஞ்சியப்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். சந்தைப்படுத்தலில் வழமையாக இரு பாலாரும் ஈடுபடுகின்றனர்.

1970 களில் சந்தைப் பொருளாதார மறுசீரமைப்பு முறை அமுல் செய்யப்பட்டது முதல் ஜீவனப் பயிர் விவசாயத்தில் இருந்து ஏற்றுமதிக்கான பணப்பயிர் உற்பத்தியை நோக்கிய ஒரு நகர்வை பாரியளவில் காண முடிகின்றது.இதன் விளைவாக ஆண்கள் இந்தத் தொழில் துறையில் அதிகமாக ஈடுபடுகின்றனர்.அதே வேளை கூலித்தொழிலாளியாக,வீட்டுக்குத் தினசரி உணவை வழங்க வேண்டிய பொறுப்பு அதிகம் பெண்களை நோக்கியதாக மாறியுள்ளது. பெண்களைப் பொறுத்தமட்டில் நீண்டகாலமாக மாற்றுணவுகளை வழங்கி,வீட்டுக்குப் பாதுகாப்பளித்தல் பெண்களே ஈடுபட்டு வந்துள்ளனர். குரக்கன் போன்ற தானியங்களை நடுதல்,பயிரிடுதல் உற்பத்திச் செய்தல் என எல்லாப் பொறுப்புக்களையும் பெண்களே ஏற்றுள்ளதோடு குடும்பத்துக்குத் தேவையான போஷாக்கு மற்றும் கனிப்பொருள்சக்தி வழங்கலில்பெண்களே ஈடுபட்டு வந்துள்ளனர்.இது ஏனைய பிரதான பயிர்களின் உற்பத்தி சில வேளைகளில் தோல்வியைத் தழுவுகின்ற போது குடும்பத்துக்குப் பெரும் உறுதுணையாகவும் இருந்துள்ளது .இவற்றுக்கு மேலதிகமாக வீட்டுத்தோட்ட செய்கை நிலங்கள்,மக்களால் சென்றுவரக் கூடிய நிலையில் உள்ள காடுகளின் காணித்துண்டுகள் என்பனவும் வீட்டுத்தேவைக்கும் சந்தைத்தேவைக்குமான உணவு,மிருகத் தீவனம்,விறகு மற்றும் மருத்துவ மூலிகை உற்பத்திகள் என்பனவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.இவ்விரு வளங்களும் ஒரு குடும்பத்தின் உணவுத் தேவையில் 70% த்தை வழங்கியுள்ளன.(விக்கிரமசிங்க 1994) மேலும் பெண்கள் பாரம்பரியமாக வீட்டுத்தோட்ட முகாமைத்துவத்துக்கும் பொறுப்பாக இருந்துள்ளனர்.பழங்களை உற்பத்தி செய்தல்,மருத்துவ மூலிகைகள்,வாசனை த்திரவியங்கள் என்பனவற்றை உற்பத்தி செய்வதில் பெணகளே கூடிய பங்கினை வகித்துள்ளனர்.காடுகளில் இருந்து உணவுகளைச் சேகரித்தல்,விறகுகளைச் சேகரித்தல் என்பனவற்றிலும் பெண்களே ஈடுபட்டுள்ளனர்.ஆண்கள் இந்த இயற்கையான காட்டுவளங்களை பெரும்பாலும் நிர்மாண மூலப் பொருட்களுக்காகவும்,மரங்கள் சம்பந்தமான உற்பத்திகளுக்கும், உதாரணமாக கித்துள் மற்றும் கள் உற்பத்திக்குமே பயன்படுத்தி வந்துள்ளனர். கருப்பட்டி,பாய்பின்னல்,தலையணைகளுக்கு பஞ்சடைத்தல் ஆகிய கிராமப்புற உற்பத்திகள் மூலமான மேலதிக வருமானத்தில் ஆண்கள் பெண்கள் ஆகிய இரு சாராரும் பங்கேற்றுள்ளனர்.

முன்னர் காடுகளாக இருந்த பல இடங்கள்,குறிப்பாக மத்திய மலை நாட்டில் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டச் செய்கையின் காரணமாக பாரிய அளவிலான நிலப்பரப்புக்கள் வியக்கத்தக்க மாற்றங்களைக் கண்டுள்ளன.இங்கு இந்த நிலத்துண்டுகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகள் நிச்சயம் வித்தியாசமான பண்புகளைக் கொண்டவையாகும்.இங்கு நிலத்துக்கான உரித்துடமை இல்லாமை ஒரு காரணமாகும்.இங்கு பெண்களே மிகவும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு ஊழியப்படையாகும்.இத்தகைய விவசாய உற்பத்திகளோடு அதிகம் இணைந்துள்ள பாரிய காடழிப்பானது இங்குள்ள கிராம மக்களை ஆற்றுப்படுகை விவசாயங்களில் பெருமளவு தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளியது.மற்றும் ஏனைய உணவு உற்பத்திகளுக்காக அவர்கள் கைவிடப்பட்ட காட்டுப் பகுதிகளின் காணிகளை நாடவேண்டியிருந்தது.

சந்தைப் பொருளாதார மறுசீரமைப்புக்கள் அறிமுகம் செய்யப்பட்டது முதல் இலங்கையில் கிராமப்புற வறுமை வீதம் துரிதமாக அதிகரித்துள்ளது. சுற்றாடல் தரக் குறைவானது கிராமிய வாழ்வாதாரங்களில் மேலும் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியது.குறிப்பாக பெண்கள் மத்தியில் இந்தச் சக்தினள் ஒன்றிணைந்தும் காணியில் இருந்த மக்களைத் தனிமைப்படுத்தும் ஆற்றல் அவற்றுக்கு இருந்தது.இது பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களை உருவாக்கியது.இதன் விளைவு கிராமப்

புறங்களில் பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பை நோக்கி வெகுவாக நகர்த்தியது.குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி.இந்தச் சம்பவங்களின் வியக்கத்தக்க தாக்கம்,பாரம்பரியமான சமூக,கலாசார வாழ்வு முறைகளில் அது ஏற்படுத்திய கண்ணீர் என்பனவற்றை புறக்கணித்துவிடவும் முடியாது. மிகைப்படுத்திக் கூறவும் முடியாது.எனவே இயற்கைச் சூழலின் ஒருமைப்பாடு பேணப்படவேண்டும் என்பதை உறுதி செய்வதில் ஆழமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.ஆண்களும் பெண்களும் இயல்பான காட்டு வளங்களை உற்பத்தி செய்வதற்கான சாத்தியங்கள் இருக்க வேண்டும்.வீட்டுத் தோட்டச் செய்கை முறைகளானது முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் உணவு உற்பத்தி முறை உறுதி செய்யும் இந்தப் பண்டைய முறை சுகாதார மற்றும் பொருளாதார பாதுகாப்பு என்பன நிலைத்திருக்க முடியும். மக்களுக்கும்,நிலத்துக்கும் இடையிலான இறுக்கமான பிணைப்பு எமது சிறிய நாட்டில் பாரிய எண்ணிலடங்காத நன்மைகளை அளிக்கக் கூடியது.இது பரந்து செறிந்து காணப்படும் சனத்தொகைக்கும் பாரிய விசாலமான நன்மைகளைக் கொண்டுவரக் கூடியது.இது நாம் மிகவும் ஜாக்கிரதையாக கவனம் செலுத்த வேண்டிய ஒன்றாகும்.

(குறிப்பு: விக்கிரமசிங்க.யு 1994. காடழித்தல்,பெண்கள் மற்றும் வனவளம்:இலங்கை ஆய்வு,சர்வதேசப் புத்தகங்கள்,அட்ரெச்ட்,நெதலாந்து.)

# வீட்டுத்தோட்டங்கள்- உணவு, பொருளாதார மற்றும் சூழலியல் பாதுகாப்புக்கு ஒரு பாரிய தீர்வைப் பேணல்



வீட்டுத் தோட்டம் என்பது சிறிய அளவிலான மரநடுகையாகும். ஒரு தனிநபரின் குடும்பத்துக்குச் சொந்தமான காணிக்குள் பொருளாதார ரீதியாக அல்லது கலாசார முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை,செடிகளை,கொடிகளை,மூலிகைகளை,வாசனைத் திரவியங்களை அல்லது மருத்துவ மூலிகைகளை வளர்த்தலே வீட்டுத்தோட்டச் செய்கையாகும்.இந்த வீட்டுத்தோட்டத்தின் பிரதானநோக்கம் குடும்பத்துக்கு உணவுகளையும்,மருந்துகளையும் வழங்கலாகும்.அத்தோடு 'கொம்போஸ்ட்' அடிப்படையில் எரிபொருள் மற்றும் பசளைகளைப் பெற்றுக்கொள்ளல். மேலதிக வருமானத்துக்காக விரைவாக வளர்க்கப்படும் தளபாடத்தேவைக்கான மரங்கள் அல்லது தேயிலை உற்பத்தி என்பனவற்றை உள்ளடக்கும் வகையில் வீட்டுத்தோட்டச் செய்கையானது விரைவாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உயரத்தில் தென்படும் பழங்கள்,மருத்துவ மூலிகைச் செடிகள் மற்றும் வாசனைத்திரவிய செடிகளின் இடையே வளர்க்கப்படும் தளபாடத் தேவை மரங்கள் என ஒரு இயற்கையான காட்டை அப்படியே ஒத்திருக்கும் வகையிலும் வீட்டுத்தோட்டங்கள் அமைகின்றன.

நூறாண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கை பரவலான வீட்டுத் தோட்டக் கண்டுபிடிப்புக்களுக்கு புகழ்பெற்ற ஒரு இடமாகும்.இந்தப் பண்டைய விவசாய காடுவளர்ப்பு முறையை சுனாமிக்குப் பிந்திய சூழ்நிலையில் உற்சாகப்படுத்த வேண்டியது மிகவும் பொருத்தமாக அமைகின்றது. வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்புவதிலும் விரிவு படுத்துவதிலும் சுனாமிக்குப்பின் விரிவான வேலைத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. நல்ல எண்ணத்தோடு மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டங்களுள் பல வெற்றியளித்தும் உள்ளன இவை அனைத்துமே சமூகங்களுக்கு வலுவூட்டலை நோக்கி நெறிப்படுத்தப்பட்டுள்ளதோடு எதிர்கால அழிவுகள்,துன்பங்கள் என்பனவற்றுக்கு முகம் கொடுக்கத் தயார்படுத்துவதை இலக்காகவும் கொண்டுள்ளன. வினைத்திறனுக்கு அவசியமான மிகவும் அடிப்படையான அம்சங்களில் ஒன்றான உணவுப் பாதுகாப்பு,பாரம்பரிய வீட்டுத் தோட்டச் செய்கை வளப்படுத்தப்பட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.இது பொதுவான ஒரு விடயமாகவும்,அது இல்லாத இடங்களில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் அமைந்துள்ளது.பயிர்செய்கை அல்லது சேனைப்பயிர்ச்செய்கையோடு இணைந்து வீட்டுத்தோட்டச் செய்கையானது, குடும்பங்களுக்கு அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஆதார உணவுகளை வழங்கக் கூடியது.இன்னும் வெள்ளம் அல்லது வரட்சி போன்ற காலநிலைத் தடுமாற்றங்களின் போது அடிப்படைப் பயிர்ச்செய்கைகள் தோல்வியடையும் பட்சத்தில்,கூடிய பணச் செலவின்றி வீட்டுத் தோட்டச் செய்கைகள் அவசியமான போஷாக்குணவை வழங்குகின்றன. வீட்டுத் தோட்ட மிகை உற்பத்தி விற்பனை செய்யப்படுகின்ற போது மேலதிக வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள முடியும்.வர்த்தக ரீதியான பொருள்கள் சிறியளவில் உற்பத்தி செய்யப்பட்டாலும் பாரிய சந்தையில் அவை இடம்பிடிக்கின்றன.வீட்டுத் தோட்ட முறையில் காணப்படும் இன்னொரு முக்கிய அம்சம் விதை பல்லினத் தன்மை பாதுகாக்கப்படும். விவசாயிகள் பல்தேசியக் கம்பனிகளில் தங்கியிருக்க வேண்டும் என்ற நிலைமை அவாகள் மீது மேலும் மேலும் பலவந்தமாகத் தணிக்கப்பட்டுவரும் இன்றைய உலகில் இந்த பல்தேசியக் கம்பனிகளின் ஏகபோகத்தோடு (பெரும்பாலும் மரபியல் ரீதியாக மாற்றியமைக்கப்பட்ட)விதை களின் நடுவே வீட்டுத்தோட்டமானது விதை வகைகளை விரிவான முறையில் பாதுகாக்கின்றன.இல்லையேல் இவற்றுள் பல படிப்படியாக தேய்ந்து அழிந்து பேரிருக்கும்.

சமூக அடிப்படையில் இந்த முறை பெரும்பாலும் பெண்களால் சுமத்தப்படுகின்ற மற்றும் பெண்களால் அமுல் செய்யப்படுகின்ற ஒரு முறையாகும்.இவ்வாறு பால் நிலை பங்களிப்புக்கள் மூலம் சமூகக் கட்டமைப்புக்குள்ளும் செல்வாக்கு செலுத்துகின்றன.இலங்கையின் கிராமப் பகுதிகளில் பல விடயங்களைக் கட்டமைப்புச் செய்யும்.ஏற்கனவே வீட்டுச் தோட்டச் செய்கை ஒரு ஒருங்கிணைந்த பங்களிப்பை வழங்குகின்றது.புதிய இடங்களில் இந்த உள்ளூர் சக்தியின் அவசியத்தை வலியுறுத்துவதானதுஉணவு,பொருளாதாரம் மற்றும் சூழலியல் பாதுகாப்பில் பாரிய விளைவுகளைக் கொண்டுவரக் கூடியது.



# கதிர்காம புனித பூமியை அசுத்தமாக்கும் வேடதாரிகள்

சிறு வயதிலிருந்தே பிள்ளைகள் பெறும் அறிவு, ஆற்றல் மற்றும் கீழ்படிவு ஆகியன அவர்களுக்கு மாத்திரமன்றி நாட்டிற்கும் பாரிய நன்மையை கொண்டுவரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சிறு பிராயத்தில் பெற்றோர்களின் அரவணைப்பில் வளரும் இவர்கள் நாட்டில் சிறந்த பிரஜைகளாக திகழ தலைசிறந்த குணாதிசயங்களை பயிரிட்டுக் கொள்கின்றனர். அதற்கு அமைவாக ஆரம்ப பள்ளியிலும் பாடசாலையிலும் இக்குணாதியசங்களை அவர்கள் வளர்த்துக் கொள்கின்றனர். அந்த வகையில் அவர்கள் வாழ்க்கையை குறித்த அறிவு, அனுபவம்,¨, நன்னடத்தை ஆகியவற்றையும் கற்றுக்கொள்கின்றனர். அக்குணங்கள் தங்கள் வாழ்க்கையோடு இரண்டர கலக்கின்றன. இது எம் சமூகத்தில் அனைவருக்கும் பொதுவான விடயமாகும்.

கதிர்காம பிரதேசத்தில் வாழும் பெற்றோர்கள் அவர்கள் பிள்ளைகளிடத்தே நடந்துகொள்ளும் விதத்தை பார்க்கின்ற போது நாம் மேற்குறிப்பிட்ட விடயங்களை காணுவது மிகவும் அபூர்வமானதாகவும் கவலைக்குரியதாகவும் உள்ளது. அவர்கள் தங்கள் பிள்ளைகளின் நாணம் மடம் ஒழுக்கம் ஆகியவற்றில் கரிசனை கொள்ளாமல் பிள்ளைகளின் உரிமைகள் குறித்து சிறிதளவேனும் எண்ணிப்பாராமல் தங்கள் வாழ்க்கையை இலகுவாகவும் கஷ்டமில்லாமலும் வாழும் பொருட்டு பணம் மற்றும் ஏனைய பொருட்களை பெற்றுக்கொள்ளும் வகையில் இப்பிள்ளைகளை பிச்சையெடுக்க அனுப்புகின்றனர்.

கதிர்காமத்திற்கு வரும் பக்தர்களுக்கு தங்க இடம் கொடுத்து சேவை வழங்கி செயற்படுதில் தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றவர்க்ள 90% எனலாம். இந்த பெரும்பான்மையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேஷம் தரித்தவர்களும் உள‌ர். அவர்களும் தொண்ணூறு வீதமெனலாம்.

கதிர்காமம், கந்தசுரிந்துகமவில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாறு வேஷம் தரித்தவர்களது குடும்பங்கள் 1500 வரை உண்டு. அவர்கள் சிறுவர்கள், வயோதிபர்கள், அங்கவீனமான பிள்ளைகள் ஆகியோரை கதிர்காமத்திற்கு வரும் பக்தர்களுக்கு அறிமுகப்படுத்தி சீவியம் நடத்துகின்றனர். அதன் மூலம் பணம் சம்பாதிக்கின்றனர். இப்பகுதியில் வாழும் மக்கள் உண்மையிலேயே ஏழைகள் தான். ஆனாலும் பெரும்பாலானோர் தொழிலுக்காக பல போலி நடவடிக்கைகளிலும் மேற்குறிப்பிட்டவாறு ஈடுபட்டு வருகின்றனர். சில காலங்களுக்கு முன்னர் செய்த ஓர் ஆய்வின் படி அவ்வாறானவர்களுக்கு நிரந்தர வீடு, காணி, நிலம், மற்றும் அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

கதிர்காம கந்தனை வழிபட வரும் பக்தர்களின் வாகனங்களை மறித்து கையேந்தும் பிள்ளைகளின் காட்சி இன்று ஓர் சாதாரண விடயமாகிவிட்டது. வாகனங்களை நிறுத்தும் மக்களிடம் இப்பிள்ளைகள் தங்கள் தாய் இறந்து விட்டதாகவும் தங்கள் தந்தை வேறு ஒரு திருமணம் செய்துகொண்டு போய்விட்டதாகவும் கூறி கையேந்துவர். தான் தற்போது தனது பாட்டியுடன் இருப்பதாகவும் அவர்களுக்கும் இப்போது ஒன்றும் செய்ய முடியாமலுள்ளது எனவும் ஆகவே தான் இவ்வாறு பிச்சையெடுக்கிறோம் என தொடர்வர். அவர்கள் அதனை அழுதுகொண்டே சொல்வார்கள். இவ்வசனங்களை கண்ணீருடன் அவர் முகங்களிலிருந்து காணும் போதும் கேட்கும் போதும் பக்தர்கள் மனம்உருகி பணத்தினாலும் மற்றும் உணவு உட்பட பரிசில்களை கொடுத்து அவர்களது கைகளை நிரப்ப தவறுவதில்லை.

காரியங்களை தேடி பார்க்காமல் உண்மையான நிலவரத்தை அறியாமல் உதவி செய்வதினால் பலனை அனுபவிப்பது வீட்டில் இருந்துகொண்டே சொகுசு வாழ்க்கையை அனுபவிக்கும் அவர்களது பெற்றோர்கள் தான். அடிப்படை வசதிகளுடன் சொகுசாக வாழ்வதற்கு அவர்கள் தோந்தெடுத்திருக்கும் இலகுவான வழி பிள்ளைகளை பிச்சையெடுக்க வைப்பதாகும். தினந்தோறும் காலையில் இவர்கள் செய்யும் காரியம் என்னவென்றால் வயோதிப பக்தர்கள் போகும் வழியில் இரண்டு பக்கத்திலும் இவர்களை கொண்டு வந்து விடுவதாகும். இந்த சிறுவர்கள் போலவே பெரியவர்களும் பெற்றோர்களும் பக்தர்களிடம் நாள் பூராவும் கையேந்தி நிற்பர். வீட்டில் வெறுமனே காலத்தை கழிக்கும் பெற்றோர் இந்த பிள்ளைகள் மற்றும் வயோதிபர்கள் கொண்டு வருகின்றதை கணக்கு பார்ப்பர். பக்தர்கள் கொடுக்கும் சீனி, பால்மா, அரிசி மற்றும் பருப்பு ஆகியவற்றை சேர்த்து மாத இறுதியில் சில்லறை கடைகளுக்கு தொகையாக விற்பனை செய்வர்.

இங்கு ஒரு வீட்டிலிருந்து மாத இறுதியில் சில்லறை கடைக்கு விற்கின்ற பொருட்களுள் அரிசி 03 மூடை, பருப்பு 80 கிலோ கிராம், பல்வேறு அளவிலான செமன் டின்கள் 30, பால்மா 10ற்கும் 15ற்கும் இடையில் அடங்கும்.

இந்த முகமூடி அணிந்தவர்கள் மேலும் அனுதாபத்தை பெற அவர்கள் இருக்கும் இடங்களில் பொலிதீன் மற்றும் ஓலைகளினால் வீடுகளை அமைத்திருப்பதையும் காணலாம். இவ்வாறான தரிப்பிடங்களை இவர்கள் அமைத்திருப்பதற்கான காரணம் வெவ்வேறு காலங்களில் பிச்சையெடுப்பதற்கு தங்களது தோற்றத்தை மாற்றிக்கொள்வதற்காகும்.

சிறு பிள்ளைகள் முதற்கொண்டு வயோதிப, ஊனமுடைய மற்றும் இளம் பெண்களும் இத்தொழிலில் ஈடுபடுவதை காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு கந்தசுரிந்துகமவை தாண்டி சென்றுகொண்டிருந்த பக்தர்கள் நிறைந்த வாகனம் ஒன்றை நோக்கி ஓர் இளம் பெண் கையேந்தினாள். வாகனத்தில் இருந்தவர்கள் அவளிடம் பாடசாலைக்கு போகிறாளா? என்று வினவினார்கள். அதற்கு அவள் தன் தந்தை இறந்து விட்டதாகவும் தன் தாய்க்கு எவ்வித வருமானமும் இல்லை ஆகவே தான் புத்தகங்களை வாங்க இவ்வாறு பிச்சையெடுப்பதாக கூறினாள். இந்த கதையை கேட்ட மக்கள் மனங்கள் உருகின. அவர்கள் தங்களிடமிருந்த

பணத்தை சேர்த்து மொத்தமாக ஆயிரம் ரூபாவை கொடுத்தனர்.

கோயிலில் மக்கள் வழிபாட்டின் பின்னர் திரும்பி வருகின்ற போது அவர்கள் உதவி செய்த அதே பெண்பிள்ளை போன்ற ஓர் பிள்ளை வீதியருகிலிருந்த பொலிதின் மூடப்பட்ட கூரை ஓலைகளினால் அமைக்கப்பட்ட ஒரு வீட்டில் காணக்கூடியதாகவிருந்தது. இருந்த இடம் மாத்திரமல்லாது உடையும் மாறியிருந்தது.

அவள் வழக்கம்போல இம்முறையும் வாகனத்திற்கு கைநீட்டினாள். அவர்கள் மீண்டும் விபரங்களை கேட்டறிந்தனர்.

"சர்! எங்க அம்மாவை யானை அடித்து கொன்றுவிட்டது. அப்பாவும் நானும் தான் வீட்டிலிருக்கம;....எங்க வீட்ட கட்டிக்கொள்ள ஏதாவது உதவி செய்ங்க" என்று கேட்டாள்

"ஏன் நாங்க போற நேரம் நீ சொன்னது வேற கதையல்லவா? அப்ப அப்பா செத்ததா தானே சொன்னாய்? அவர்கள் அப்படி கேட்கவே அவள் மின்னல் வேகத்தில் ஓடி மறைந்தாள்.

இவ்வாறான தந்திரங்களை அவர்களது பெற்றோர்கள் தான் கற்பிக்கின்றார்கள் என்பது மிகவும் கவலையான விடயமாகும். பிள்ளைகளை நாள் முழுவதும் தொழிலில் ஈடுபடுத்தி மாலையில் பெற்றோர் "வியாபாரத்தின்" இலாப நட்ட கணக்கை பார்க்கின்றனர்.

அநேக நேரங்களில் கொடுக்கின்றவர்கள் அல்லது கொடையாளிகள் கொடுக்கின்ற சோறு பார்சலை பெற்றுக்கொள்ள பிள்ளைகளை வெய்யிலிலும் தூசியிலும் ஏன் மழையிலும் கூட நீண்ட வரிசையில் நிற்கவைக்கும் இந்த பெற்றோர்கள் அவர்கள் ஒன்றோ இரண்டோ சோறு பார்சலை கொண்டு வந்த பின்னர் அவர்கள் படுகின்ற கஷ்டத்தை சற்றேனும் பொருட்படுத்தாது மீண்டும் வேறு உடை மாற்றி அவர்களை மீண்டும் வரிசைக்கு அனுப்புவர்.

சில பெண்கள் ஓரிரு நாட்கள் வயதான குழந்தைகளை சுமந்துகொண்டு நாள் பூராவும் புனித பூமியை சுற்றுவர். கிராமங்களில் பிரதான பாதைகளில் இவர்களை வைத்துக்கொண்டு அவர்கள் கையேந்துவர். கணவர் இறந்துவிட்டதாகவும் பிள்ளையின் செலவுக்காக இவ்வாறு செய்வதாகவும் அவர்கள் சொல்வர்.

சில வீடுகளில் கணவன்மார் எந்தவித வேலையும் செய்யாமல் இவ்வாறு தங்கள் மனைவியையும் பிள்ளையும் வெளியில் அனுப்பி பிழைக்கின்றனர். அநேக கணவன்மார் இப்பெண்களுக்கு அநேக கொடுமைகளை இழைக்கின்றனர். பெண்கள் வருடத்திற்கு ஒரு முறை பிள்ளை பெற்றுக்கொள்வர். அதன் நோக்கம் சிறு பிள்ளைகளை பிச்சையெடுக்க வைப்பதாகும்.

பிச்சையெடுக்கும் தொழிலில் இவ்வாறு ஈடுபட வைப்பதால் அவர்களை பாடசாலைக்கு அனுப்புவதுமில்லை. அவர்கள் இத்தொழிலில் ஈடுபடுவதற்கு தயாராக இருக்கின்றனர். அநேக நேரங்களில் இக்குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களை குணப்படுத்தவும் இப்பெற்றோர் அக்கறை செலுத்துவதில்லை. அவர்களை குணப்படுத்தினால் அவர்களது தொழிலை செய்ய இயலாமை அல்லது வருமானம் குறைகின்றமையே அதற்கு காரணமாகும்.

கதிர்காம புண்ணிய பூமியில் 13 வயதுடைய பிள்ளை பிச்சை எடுக்கிறாள். அது ஏழு வயதுடைய ஆண் பிள்ளையை தோலில் சுமந்துகொண்டே அக்காரியம் நடக்கிறது. அந்த பிள்ளையின் ஒரு காலில் சலம் வடியும் அளவுக்கு காயம். அந்தக் காலை காட்டி அதனை சுகப்படுத்திக்கொள்ள இவ்வாறு பிச்சையெடுப்பதாக கூறி கையேந்துகிறாள். இதனை கண்ட ஒரு வைத்தியர் அதனை குணபடுத்தத்திக் கொடுக்க முன்வந்தார். ஆனால் அவளுடைய பெற்றோர் அதற்கு இணங்கவில்லை. காரணம் அவர்களுடைய வருமானம் அதனால் பாதிக்கப்படலாம்.

கொடையாளிகள் சிலர் 20ஏக்கர் நிலத்தில் ஒரு லாரியில் வந்து உலர் உணவு பகிர்ந்து கொடுக்க தொடங்கினர். இதனை பெறுவதற்கு பிள்ளைகளை தூக்கிக்கொண்ட தாய்மார் வரிசையில் அலைமோதினர். அந்த பார்சல்களை பெற்றுக்கொள்ள அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டனர். சில தாய்மார்கள் பொருட்களை வாங்க கவனம் செலுத்திய போது தங்கள் பிள்ளைகள் கீழே விழுவதையும் பொருட்படுத்தவில்லை. உண்மையான தாயாக இருந்தால் பிள்ளை கீழே விழுந்தவுடன் அவர்களை தூக்க வேண்டும் ஆனால் இவர்களோ தங்கள் பொருட்களை பெறும் நோக்கில் கர்ப்பிணித் தாய்மார் என்றுகூட பார்க்காமல் எல்லோரிடமும் சண்டை போட்டுக்கொண்டிருந்தனர்.

இது அதேபோல இன்னுமோர் நிகழச்சி. வீதியில் கையேந்திய வண்ணம் இவர்கள் தங்கள் பெற்றோர் சுனாமியில் இறந்து விட்டதாக கூறுகின்றனர். தங்கள் பாட்டியுன் அவர்கள் வாழ்வதாகவும் பாடசாலைக்கு செல்ல இவ்வாறு பிச்சையெடுப்பதாகவும் அவர்கள் மேலும் கூறினர். இதனால் மனம்உருகிய ஓர் தம்பதியினர் ரூ 2000.00 ஐ கொடுக்க முன் வந்தனர்.

அதற்கு சில விநாடிகளின் பின்னர் அவர்களுக்கு பாட்டியாக தோன்றிய ஒரு பெண் அக்காசை வந்து பறித்தாள். அப்பிள்ளை அம்மா என்று சத்தமிட அவளின் தாயார் வந்து அந்த வயோதிப பெண்ணுடன் சண்டையிட தொடங்கினாள். பணம் கொடுத்த தம்பதியினர் உடனடியாக சென்று அச்சண்டையை நிறுத்தினர். அந்த வயோதிப பெண் இவ்வாறான ஓர் கதையை அவர்களுக்கு கூறினாள்.

"இது இப்பிள்ளையின் அம்மா. அப்பா தச்சு வேலை செய்கிறார். இவர்கள் திருட்டு வேலைகளை செய்வது மாத்திரமல்லாது சிறு வயதிலிருந்து இப்பிள்ளைகளையும் அவ்வாறான காரியங்களை செய்ய தூண்டுகின்றனா;" என சொல்லி முடித்தாள்.

இது இவ்வாறான நிலையை புரிந்துகொள்ளகூடிய உதாரண கதைகள் இரண்டு மாத்திரமே. இவ்வாறான நூற்றுக்கணக்காண கதைகளை கூட எங்களால் சொல்ல கூடிய அளவுக்கு தகவல்கள் உள்ளன. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இவ்வாறு இத்தொழிலில் ஈடுபடுவோர் கதிர்காம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் வேறு இடங்களிலிருந்து வந்து பலாத்காரமாக பல இடங்களில் தங்கி இக்காரியங்களில் ஈடுபடுகின்ற படியால் உண்மையாகவே உதவி பெற வேண்டியவர்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

உண்மை சொல்ல பழக்கப்பட வேண்டிய பிள்ளைகள் பொய் சொல்ல பழக்கப்படுகின்றனர். அச்சம் நாணமின்றி சிறுவயதிலிந்து அவர்களை வாழ பழக்குகின்றபடியால் இவர்கள் வளர்ந்து பெரியவர்களாகின்ற போது எவ்வாறான தொழிலை செய்து வாழ்வர் என்பது கேள்வி குறியான விடயமாகும். மறுபுறம் பூப்போன்ற இப்பிள்ளைகளின் அடிப்படை உரிமைகளை சிறு வயது முதலே இல்லாதொழிக்கின்ற அவர்களுடைய பெற்றோர்களுக்கு எவ்வாறான தண்டனை கொடுக்கப்பட வேண்டுமோ என எங்களால் ஊகிக்க கூட முடியவில்லை.

கதிர்காம புனித நகரத்திலும் புனித பூமியிலும் நடக்கும் இப்போலி செயற்பாட்டை இவ்விடத்தின் கௌரவத்தை பேண உடனடியாக நிறுத்த உரிய அதிகாரிகள் விரைவில் கவனமெடுக்க வேண்டும். அவ்வாறு நடைபெறாத பட்சத்தில் அங்கு செல்லும் பக்தர்கள் மற்றுமன்றி ஏனையோருக்கும் அநேக அசௌகரியங்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

**கே. டீ. தேவப்பிரிய**
**கதிர்காமம்**

# யாழ்ப்பாணத்தை வாட்டி வதைத்த “நிஷா”



யாழ்ப்பாண மாவட்டம் அதன் மோசமான பயங்கரங்களுள் ஒன்றை அண்மையில் சந்தித்தது.அதுதான் “நிஷா” என்ற புயல்காற்று.யாழ்ப்பாண மாவட்டத்தை மணிக்கு 103 கிலோமீட்டர் வேகத்தில் கடந்து சென்ற இந்தப் புயல் காற்று பாரிய பல அழிவுகளை ஏற்படுத்தியது.நவம்பர் மாதம் 22 ஆம் திகதி 2008 இல் கடும் மழையோடு ஆரம்பித்த இந்த மோசமான காலநிலை 27 ஆம் திகதிவரை நீடித்தது.25 ஆம் திகதி இது உச்சத்தில் இருந்தது.

ஆறுதினங்கள் நீடித்த மோசமான மழையை திருநெல்வேலியில் உள்ள காலநிலை அவதான நிலையம் பதிவு செய்துள்ளது.ஆகக் கூடிய மழைவீழ்ச்சியாக 765.5 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் பதிவான ஆகக் கூடிய மழைவீழ்ச்சி இதுவென்று கூறப்படுகின்றது.25 ஆம் திகதி மட்டும் 389.8 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.யாழ்ப்பாணத்தில் ஒரே தினத்தில் பதிவான ஆகக் கூடிய மழைவீழ்ச்சி இதுவாகும். பதிவாகியுள்ள தகவல்களின் படி இதற்கு முன்னர் செப்டம்பர் 25,2001 இல் பதிவான 211.8 மில்லி மீட்டர் மழையே ஆகக் கூடிய மழைவீழ்ச்சியாகும். மாவட்டத்தின் சராசரி மழை வீழ்ச்சி 1231 மில்லிமீட்டராகும்.ஜனவரி 2008 முதல் 28 நவம்பர் 2008 வரையான காலப்பகுதியில் பதிவான மழைவீழ்ச்சி 1623.8 மில்லி மீட்டராகும்.

குளங்கள்,நீர் தாங்கிகள் என்பன நிரம்பி வழிந்தன.இதனால் வெள்ளப்பொருக்கும் ஏற்பட்டது. பல கிராமங்கள் மற்றும் நகரங்கள் ஊடாக வெள்ள நீர் பாய்ந்தோடியது.சில இடங்களில் வெள்ள நீர் மட்டம் மூன்று முதல் நான்கு அடிகள் வரை உயர்ந்தது.குறிப்பாக யாழ்ப்பாண நகரசபைக்குட்பட்ட பிரதேசம் மோசமாகப் பாதிக்கப்பட்டு அங்குள்ள கிணறுகளும் மாசடைந்தன.

யாழ்ப்பாண நகரில் முன் ஒருபோதும் இல்லாத அளவுக்கு வெள்ள நீர்மட்டம் உயர்ந்தது.பல குடும்பங்கள் வீடுகளை இழந்தன. வீடுகளில் வசிப்பவர்களும், வியாபாரிகளும் நிர்க்கதிக்கு ஆளானர்.விவசாயம்,மீன் பிடி,கா



ல்நடைவளர்ப்பு,வீடமைப்பு,நீர்விநி யோகம்,சுகாதாரம் மற்றும் கல்வி என அனைத்துத் துறைகளும் பாதிக்கப்பட்டன.மரம்மட்டைகள், வீடுவாசல்கள், வர்த்தகக் கட்டிட ங்கள்,நெடுஞ்சாலைகள்,கரையே ாரப்பதைகள்,தொலைத் தொடர்பு வலைப்பின்னல்கள்,மின்சார விந ியோகம்,பழச்செய்கைகள்,குடிை சத் தொழில்கள் என எல்லாமே பாதிக்கப்பட்டன.

பயிர்ச்செய்கை நிலங்கள் வெள்ளப்பெருக்கால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டன.இவற்றுக்கு மேலதிகமாக தரையில் வந்து கலந்த உப்பு நீரால் எதிர்காலப் பாதிப்புக்களும் அதிகமாகியுள்ளன. ஒரு மதிப்பீட்டின் பிரகாரம் எல்லாப் பிரிவுகளுக்கும் ஏற்பட்ட மொத்தச் சேதம் சுமார் 9285.22 மில்லியன்



ரூபாய்களாகும்.

(மூலம் :சமூக செவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு)

97656குடும்பங்கள் (338579பேர்)இடம்பெயர்ந்தனர் 165526 குடும்பங்கள் (546507பேர்) னத்தொகையில் இருந்தே இந்த இடப்பெயர்வு இடம்பெற்றது.இதனால் பெரும் அவல நிலை ஏற்பட்டது.மொத்தம் 72338 குடும்பங்கள் (245444 உறுப்பினர்கள்) நண்பர்களோடும், உறவினர்களோடும் வாழுகின்றனர். அதேவேளை 23318 குடும்பங்கள் (93135பேர்) 339 நலன் புரி நிலையங்களில் வாழுகின்றனர். நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வகையில் பாடசாலைகள் பல நலன்புரி நிலையங்களாக மாறியுள்ளன.பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அனர்த்தம் காரணமாக உள்ளூராட்சி சபைகளும் ஸ்தம்பிதம் அடைந்து விட்டன.

யாழ்ப்பாண நகரில் முன் ஒருபோதும் இல்லாத அளவுக்கு வெள்ள நீர்மட்டம் உயர்ந்தது.பல குடும்பங்கள் வீடுகளை இழந்தன.வீடுகளில் வசிப்பவர்களும், வியாபாரிகளும் நிர்க்கதிக்கு ஆளானர். விவசாயம்,மீன் பிடி,கால்நடைவளர்ப்பு,வீடமைப்பு,நீர்விநியோகம்,சுகாதாரம் மற்றும் கல்வி என அனைத்துத் துறைகளும் பாதிக்கப்பட்டன.

வீதிகளை சுத்தம் செய்ய முடியவில்லை,குப்பைகளைச் சேகரிக்க முடியவில்லை,முறிந்து விழுந்த மரங்களை அகற்ற முடியவில்லை.அரித்துச் செல்லப்பட்ட கரையோரப் பாதைகளைச் சீர்செய்ய முடியவில்லை.இவற்றுக்கெல்லாம் காரணம் போதிய நீர்வசதிகள் இல்லாமை.இவற்றைச் செய்ய இயந்திரங்களும்,உபகரணங்களும் தேவை .
அவற்றுக்கு நிதி தேவை.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை மீளக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்.அப்போது தான் அவர்கள் தமது வழமையான வாழ்வு முறைக்குத் திரும்பலாம். தமது வீடுகளைப் பழுது பார்க்க,தமது வளவுகளை சுத்தம் செய்ய,தண்ணீருக்காக கிணறுகளைப் புனரமைக்க,அத்தோடு தமது சிதைந்து போன வாழ்வு முறையையும்,வாழ்வாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப இந்த மக்களுக்கு உதவிக் கரம் நீட்டப் போவது யார்? ஏன்ற ஆவலோடு இந்த மக்கள் காத்திருக்கின்றனர்.

*-சந்ரா கருணாரட்ண*

# பல்வேறு பாதிப்புக்களுக்குள்ளாகும் நலன்புரி முகாம் வாழ் மக்கள்



பூந்தோட்டம் நலன்புரி முகாம்

பூந்தோட்டம் நலன்புரி முகாம் 1996 ஆம் ஆண்டு,நவம்பர் மாதம் 26 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. கச்சேரிப் பிரிவால் இது ஆரம்பத்தில் நிர்வகிக்கப்பட்டது. ஒவ்வொரு கச்சேரி பிரிவுகளும் எட்டு அலகுகளை நிர்வகித்தன.இந்த முகாமில் மக்கள் தொகை குறைவடைந்து வந்ததோடு ஒவ்வொரு பிரிவுகளும் தற்போது நான்கு அலகுகளை நிர்வகிக்கின்றன. கற்குளம் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியேறத் தொடங்கியதுடன் இங்குள்ள சனத்தொகை குறைய ஆரம்பித்தது. உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தற்போது இந்தப் பிரிவுகள் ஊடாக தமது பிரச்சினைகளை முன்வைக்கக் கூடியதாக உள்ளது.இவர்களுக்கு உதவ விரும்பும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கச்சேரி அலகுகளில் இருந்தும் அனுமதி பெறுமாறு முதலில் வேண்டப்படுகின்றனர்.

துற்போது பூந்தோட்டம் நலன்புரி முகாமில் 527 குடும்பங்கள் வகிக்கின்றன..

இந்த நிலயத்தில் உள்ளவர்களில் 103 பேர் விதவைகள்,25பேர் ஊனமுற்றவர்கள். மோட்டார் இயந்திரத்தொழில்நுட்பம், மேசன்வேலை, தச்சுவேலை, கைப்பணிக்கலை,தையல்வேலை என்பனவற்றில் பல இளைஞர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் தொழில் பயிற்சிகளை அளித்துள்ளன.இவற்றுக்கு மேலதிகமாக COMTEC நிறுவனத்தில் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

அண்மையில் பெய்த கடும் மழை இங்கு வாழும் மக்களுக்கு பல சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.இந்த நலன்புரி நிலைய வீடுகளின் கூரைகள் ஒழுகிவடிவதால் மக்கள் பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.மேலும் இங்குள்ள 19 மலசலகூடங்களும், பாவிக்க முடியாத அளவுக்கு மோசமான நிலையில் இருக்கின்றன.இவற்றின் கூரைகளும்,கதவுகளும் திருடர்களால் திருடப்பட்டுள்ளன.பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரச்சினைகளை கச்சேரிகளில் முறையிட்டுள்ளனர். எவ்வாறேனும் ஒவ்வொரு தடவையும் கதவுகளும்,கூரைகளும் திருடர்களால் அகற்றப்படுவதால்,கச்சேரியும்,அரச சார்பற்ற நிறுவனங்களும் இவற்றை மீண்டும் மீண்டும் செய்து கொடுக்கவும் விரும்பவில்லை.

மேலும் சுத்திகரிப்பு பணிகளுக்காக நியமிக்கப்பட்ட பத்துப் பேரில் ஆறுபேர் விலகிச் சென்றுள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர்.இதன் விளைவாக வடிகான் பராமரிப்பு கைவிடப்பட்டுள்ளது.இவற்றோடு வீதிப் பராமரிப்பும் கைவிடப்பட்டுள்ளதால் போக்குவரத்திலும் மக்கள் கடும் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வீடுகளை நிர்மாணிப்பதில் உதவி வரும் சேவாலங்கா நிறுவனத்தின் உதவியோடு கற்குளம் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.எவ்வாறேனும் தண்ணீர் வசதி,மலசலகூட வசதி என்பன போதியளவு இல்லாததால் மக்களால் இந்தப் பிரதேசத்தில் குடியேற முடியாதுள்ளது.இந்த வசதிகள் போதியளவு கிடைக்குமிடத்து இந்தப் பிரதேசத்தில் குடியேற மக்கள் ஆர்வத்துடன் உள்ளனர்.ஆனால் மழை காலம் முடிவடைந்த பின்பே இந்தவிடயங்களில் கவனம் வெலுத்த முடியும் என்று கச்சேரி அறிவித்துள்ளது.

இங்குள்ள பெற்றோரைப் பொறுத்தமட்டில் தமது பிள்ளைகளின் எதிர் காலம் அவர்களை வாட்டிவதைக்கும் மற்றொரு விடயமாகும். மீளக் குடியமர்த்துவதன் மூலம் தமது பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வாய்ப்பு கிடைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். நலன்புரி முகாம்களில் வாழ்வதால் சிறுவர்கள் மத்தியில் ஏற்படும் நீண்ட கால கலாசாரத் தாக்கங்கள் குறித்தும் அவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இந்த மக்களின் விருப்பமின்றி அவர்களை வேறு இடங்களுக்க மாற்றுவது குறித்தும் சில தரப்பினர் எதிர்ப்ப தெரிவித்துள்ளனர்.ஆலோசனைச் சேவை வழங்கும்`,அங்கவீனர்களுக்க உதவும் ஒர்ஹான்,RAD,FOSDOO ,ஒக்ஸ்பாம் மற்றும் NRE என்பன இடம்பெயர்ந்த மக்களுக்காகச் சேவைகளை வழங்கிவருகின்றன.



## மன்னார் நானாட்டானில்

# எதிர்கால நம்பிக்கையோடு வாழும் இடம்பெயர்ந்தோர்

மதவாச்சியிலிருந்து மேற்காக 70 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள இடம்தான் நானாட்டான்.2007 செப்டம்பர் மாதம் முதல் தான் இந்த இடம் பற்றி பிரபலமாகப் பேசப்பட்டு வருகின்றது.இதற்கு காரணம் யுத்த நிலைமைகள் காரணமாக முசலி பிரதேசச் செயலகப் பிரிவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஒரு சில மணிநேரத்துக்குள் நிர்க்கதி நிலைக்கு ஆளானமையாகும்.முசலி பிரதேசச் செயலாளர் பிரிவின் கீழ் வரும் பிரதான மீன்பிடி மற்றும் விவசாயப் பிரதேசங்களாக அரிப்பத்துறை,சிலாவ த்துறை,முள்ளிகுளம்,கேணி ஆகியவை அமைந்துள்ளன.இந்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 1990 இலும் மோதல்கள் காரணமாக மடு பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்தவர்கள் சிறிது காலம் அகதி முகாம்களில் வாழ்க்கையை ஓட்டிய இவர்களுக்கு மீண்டும் 1994 இல் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பும் வாய்ப்பு கிட்டியது.

ஆனாலும் இந்த மக்களால் நீண்டகாலம் தமது சொந்த இருப்பிடங்களில் நிம்மதியாக வாழும் வாய்ப்பு கிடைக்கவில்லை.மீளக் குடியேறியது முதல் அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து அனைத்தையும் கைவிட்டுவிட்டு கையில் கிடைத்ததை மட்டும் சுருட்டிக் கொண்டு மீண்டும் அகதிகளாகும் நிலைக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டனர்.(2007 செப்டம்பர் முதலாம் திகதி) இம்முறை அவர்களுக்கு வெளியேற வழங்கப்பட்ட கால அவகாசம் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே.

தமது கையில் கிடைத்ததை மட்டும் எடுத்துக் கொண்டு சைக்கிள்க ளிலும்,ஏனையவாகனங்களிலும் ஏறி ஏழு கிலோமீட்டர் தூரம் வந்து நானாட்டான் பிரதேசத்தை இவர்கள் அடைந்தனர்.சிலர் வேறு இடங்களில் உள்ள தங்களது உறவினர்களிடம் தஞ்சம் அடைந்தனர். நானாட்டான் பிரதேசத்துக்கு வந்தவர்கள் அங்கு தங்குவதற்காக கூடாரங்களை அமைத்து கொண்டனர்.

நானாட்டான் பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ள தகவலின் படி இங்கு இடம்பெயர்ந்துள்ள விவசாய மற்றும் மீன்பிடி குடும்பங்களின் எண்ணிக்கை 1200.இவர்கள் நானாட்டான் பிரதேசச் செலாளர் பிரிவுக்குள் பல இடங்களில் பரவலாக வாழுகின்றனர்.இவர்களுக்கு இப்போது அரசாங்கத்தால் உலர் உணவு வழங்கப்படுகின்றது.ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு 2 1/2 கிலோ அரிசி,மா இரண்டு கிலோ,சீனி 250 கிராம்,மரக்கறி எண்ணெய் 250 மில்லிலீட்டர்,பருப்பு 850 கிராம் என்பன வழங்கப்படுவதாகப் பிரதேசச் செயலாளர் கூறினார்.இவற்றுக்கு மேலதிகமாக கத்தோலிக்க அமைப்பு மற்றும் கரிடாஸ்,செடக்,மன்னார் வாழ்வோதயம் போன்ற அரச சார்பற்ற அமைப்புக்களும் உலர் உணவுப் பொருட்களையும் ஏனைய உதவிகளையும் வழங்கி வருகின்றன.

கோயில் மேடு பிரதேசத்தில் வசிக்கும் எல்.றொபர்ட் மற்றும் புஷ்பராணி ஆகிய மீன்பிடித் தம்பதிகள் இதுபற்றிக் கூறுகையில்,

“நாம் கண்டியைச் சேர்ந்தவர்கள் 35 வருடங்களுக்கு முன்பிருந்தே கடல் தொழில் செய்து கொண்டு மன்னார் குடா பிரதேசத்தில் தான் வாழ்ந்து வருகின்றோம்.ஆனால் இன்று யுத்தம் காரணமாக நாம் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இன்றி எமது தொழிலை செய்து கொண்டு நாம் நிம்மதியாக வாழ்ந்து வந்தோம்.ஆனால் இன்று தொழில் செய்ய முடியாமல் அரசாங்கம் தரும் நிவாரணத்தில் தங்கி வாழ வேண்டிய நிலைக்குத்



தள்ளப்பட்டுள்ளோம்.வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றோம்" என்று கூறினர்.

நானாட்டான் பிரதேசத்தில் கோயில் மற்றும் ஆலைகளில் தங்கியுள்ளவர்களைச் சந்தித்துப் பேசினோம்.கோயில் முகாம் சிறு சிறு கூடாரங்களால் அமைக்கப்பட்டிருந்தது.இங்கு 38 குடும்பங்கள் வசிக்கின்றன.ஆலை முகாம்களில் 64 குடும்பங்கள் வசிக்கின்றன.கோயில் முகாமில் கூரைகள் ஓலைகளாலும், ஆலை முகாமின் கூரைகள் தகரத்தாலும் அமைக்கப்பட்டுள்ளன.இரண்டு இடங்களிலும் தரை மணல் தான்.ஒரு கூடாரத்தையும் இன்னொரு கூடாரத்தையும் பிரிப்பது பொலித்தீன்களும் பழைய சேலைகளும் தான்.மணல் தரையில் விளையாடும் சிறுவர்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

இடம்பெயர்ந்த 95 சிறுவர்கள் புனித மரியான் முன்பள்ளிக்குச் செல்கின்றனர்.இங்கு இவர்கள் மணல் தரையில் அமர்ந்து தான் கல்வி கற்க வேண்டியுள்ளது.இருப்பதற்கு கதிரைகளும் இல்லை வேறு வசதிகளெதுவுமே இல்லை .இந்தச் சிறுவர்களுக்குப் பாடசாலைக்:குச் செல்ல சீருடைகளும் இல்லை.இங்கு பணிபுரியும் ஆசிரியைகளுக்கு கொடுப்பனவுகள் கூட கிடையாது.

"இந்தச் சிறுவர்களை இதற்கு மேலும் கைவிட முடியாது.அவர்களுடைய எதிர் காலத்தை நாம் காப்பாற்ற வேண்டும். அதனால் தான் நாமாகவே விரும்பி இங்கு பணிபுரிகின்றோம;" என்று கூறினார் அந்த ஆசிரியைகளுள் ஒருவர்.

நீங்கள் உங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முயற்சிக்கவிலையா என்று இவர்களிடம் கேட்டபோது,

"யாருக்குத் தான் திரும்பிச் செல்ல விருப்பம் கிடையாது.நாம் பிறந்தது முதல் வாழ்ந்த வீடுகள்,தொழில் செய்யும் இடங்கள் என எல்லாவற்றையும் சொற்ப நேரத்தல் தொலைந்துவிட்டு எந்த நம்பிக்கையும் இன்றி இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் நாம் வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பது"என்று அவர்கள் திருப்பிக் கேட்கின்றனர்.

"இன்னும் அங்கு கண்டிவெடிகள் அகற்றப்படவில்லையாம்.அதனால் அங்கு செல்ல அனுமதியும் இல்லை"என்றார் இன்னொருவர்.

"யுத்தம் என்பது ஜாதி,மத பேதமின்றி எல்வோரையும் பாதித்துள்ளது. சகலரினதும் சொத்துக்களை நாசமாக்கியுள்ளது.இந்த அழிவுகள் மிகப் பெரியவை.இவ்வாறு வாழ்வை இழந்த எவரும் இன்னும் தமது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பியதாகத் தெரியவில்லை"என்று மற்றொரு பிரிவினர் கூறுகின்றனர்.கட்டிடங்களை வேண்டுமானால் மீண்டும் கட்டித்தரலாம். ஆனால் இழக்கப்பட்ட பெறுமதிமிக்க உயிர்களுக்கு பதில் சொல்லப் போவது யார்? இது இன்னும் சிலர் முன்வைக்கும் கேள்வி.இழந்தவை அனைத்துமே நாட்டின் எதிர் காலத்துக்கு ஈடு கொடுக்கும் உயிர்கள் அல்லவா.இந்த உயிர்களைத் திருப்பித் தர எவராலாவது முடியுமா? ஏன்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இங்கு இன்னொரு குழுவினரைச் சந்தித்தோம். இவர்கள் அரிப்புத்துளை பிரதேசத்தில் இருந்து நானாட்டான் பகுதிக்கு வந்து குடியேறியவர்கள். இவர்கள் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் தங்கியுள்ளனர்.இவர்களுள் உயர் வகுப்பு படிக்கும் மாணவிகள் சிலரும்,பாடசாலை ஆசிரியை ஒருவரும் இருந்தார்.

"நாம் தமிழர்கள் என்பதால் எங்கு சென்றாலும் பிரச்சினைதான்.யாழ்ப்பாண ம்,மன்னார்,வவுனியா பிரதேச அடையாள அட்டை உள்ளவர்களைப் புலிகளைப் பார்ப்பது போன்றே பார்க்கின்றனர்.மிகவும்

வித்தியாசமான முறையில் எம்மை விசாரிக்கின்றனர். மிக அண்மைய தூரத்துக்குச் செல்வதாயின் அடையாள அட்டையை சோதனைச் சாவடியில் வைத்துவிட்டு டோகன் எடுத்துச் செல்ல வேண்டும். நீண்ட தூரம் செல்வதாயின் கடற் படையினரிடம் அனுமதி பெறவேண்டும்.சில வேளைகளில் ஒரு சோதனைச் சாவடியில் வழங்கப்படும் டோக்கனை இன்னொரு சோதனைச் சாவடியில் ஏற்றுக் கொள்வதில்லை. எமது கெட்ட நேரம்,டோக்கன் தொலைந்துவிட்டால் அதோ கதிதான்."என்று இவர்கள் கருத்து தெரிவித்தனர்.



இவர்களது கல்வி நிலை இடப்பெயர்வால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.இதனால் உளவியல் ரீதியாகவும் இவர்கள் சோர்வுற்றுள்ளனர். வேறு இடங்களுக்குச் சென்று தங்கியிருந்து படிக்கவும் முடியாத நிலை.மாலை ஆறுமணிக்குள் முகாம் திரும்பிவிட வேண்டும்.ஒரே கூடாரத்துக்குள் பல குடும்பங்கள் இருப்பதால் பாடங்களை மீட்டல் செய்யவும் முடியாது. வெளியிலிருந்து நண்பர்கள் யாராவது வந்தால் அவர்கள் பத்து நிமிடங்கள் மட்டுமே இருக்க முடியும். ஊண்மையில் முகாம் வாழ்வு இப்போது அலுத்துப் போய்விட்டது.

நானாட்டான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 700 மாணவர்கள் கல்விபயிலுகின்றனர். பெட்ரிக் இமானுவல் குரூஸ் என்பவர் இதன் அதிபராகப் பணிபுரிகின்றார்.இடம்பெயர்ந்து வாழும் மாணவர்கள் சுமார் 150 பேர் நான்கு முதல் ஆறு கிலோமீட்டர் தூரம் இந்தப்பாடசாலைக்கு நடந்து சென்று கல்வி கற்கின்றனர்.இவர்களுக்குப் போதிய உணவுகள் கூட கிடைப்பதில்லை. இதனால் மாணவர்கள் அவ்வப்போது மயங்கி விழுவதுண்டு.இவர்களது கல்வி மட்டமும் இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களது உணவுப் பிரச்சினை,பாடசாலை சீருடைப் பிரச்சினை,காலணிப் பிரச்சினை என்பனவற்றை அதிபரும், ஆசிரிய, ஆசிரியைகளும் இயலுமான வரைக்கும் தீர்த்து வருகின்றனர்.ஆனால் தொடர்ந்து இந்த உதவிகளைச் செய்வதில் அவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.மாணவ,மாணவிகளின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றாமல் அவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது என்று இந்த ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கரிடாஸ் வாழ்வோதய திட்டம் இதற்கு முன் இந்தப் பாடசாலைக்கு உதவிகளை வழங்கியுள்ளது.

பல குடும்பங்களில் ஒரே கூடாரத்துக்குள் வாழ்வது இந்தப் பிள்ளைகள் மத்தியில் பல்வேறு விதமான பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளது.இது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயம் என்று ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.தங்களால் முடிந்த அளவுக்கு மாணவர்களை பௌதிக ரீதியாகவும்,உளவியல் ரீதியாகவும் உறுதியான நிலையில் வைத்திருக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இதற்காக பாடசாலை அதிபரும் பிதா சீமான்பிள்ளை அவர்களும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகவும் அவர்கள் கூறினர். இதுவரை இந்த மாணவர்களுக்கான மேசைகள்,மற்றும் கதிரைகள் சில மட்டுமே கிடைத்துள்ளன.ஏனைய உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என்று பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார்.

"இந்தப் பிள்ளைகளுக்காக ஐந்து கம்பியூட்டர்கள் தேவைப்படுகின்றன. அவர்களுக்கு கணினிக் கல்வியும் போதிக்க வேண்டும் என விரும்புகின்றோம்.குறைந்த பட்சம் 100 சைக்கிள்களும் தேவைப்படுகின்றன.இதன் மூலம் இவர்களின் போக்குவரத்துச் சிரமங்களைக் குறைக்க முடியும்"என்றார் அதிபர்.

:நானும் இடம்பெயர்ந்தவன் தான் இடம்பெயர்ந்த ஏனைய மக்களைப் பார்க்கின்ற போது எனது மனம் மிகவும் வேதனையடைகின்றது.சிலர் இந்த மக்களைப் பற்றி எந்த அக்கறையும் எடுத்துக் கொள்வதில்லை.இவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமும் கிடையாது.இவர்களை மீளக் குடியமர்த்துவது பற்றி கூட பலர் சிந்திப்பதும் இல்லை.24 மணிநேரத்துக்குள் அல்லது 48 மணிநேரத்துக்குள் எம்மை மீளக் குடியமர்த்துவதாக அன்று கூறினர். ஆனால் இன்று ஒன்றரை வருடங்களாகிவிட்டன.இன்னமும் இந்தக் கூடாரங்கள் தான் கதி என வாழுகின்றோம்.வேலையில்லாப் பிரச்சினை,உணவுத்தட்டுப்பாடு ,சுகாதாரப் பிரச்சினை மற்றும் ஏனைய சமூகப் பிரச்சினைகள் தான் இன்று முகாம் வாசிகளை வாட்டி வதைக்கின்றன.

முகாமில் வசிக்கும் மக்களின் சுதந்திரம் குறித்து கருத்து வெளியிட்ட கிறிஸ்தவ மதகுரு "இராணுவ வீரர்களின் கவனத்துக்குக் கொண்டுவராமல் எந்த ஒரு காரியமும் செய்யமுடியாது.

சில நேரங்களில் தனிப்பட்ட சுதந்திரம் கூட மீறப்படுகின்றது. ஒரு பெண்ணுக்கு டாக்டர் ஒருவரைச் சந்தித்து தனது நோய் பற்றி தனியாகப் போசும் உரிமை கூட கிடையாது.அங்கும் கூட இராணுவ வீரர் ஒருவர் காவலில் இருப்பார்.முகாம்களிலிருந்து வெளியேறி கடைகளுக்குச் செல்லமுடியாது. பாதுகாப்போடு தான் செல்ல வேண்டிய நிலை.கடந்த நத்தார் காலத்தின் போது இந்த முகாமில் இருந்தவர்கள் பொருள்களை வாங்க கடைக்குச் சென்றனர்.அப்போது ஆறுபோருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் இராணுவ வீரர் ஒருவரும் எடன் சென்றார்."என்று கூறினார்.

இங்கு மனிதாபிமானம் பங்கருக்குள் பதுங்கிக் கொள்கிறது. அதற்கு இடமளிக்காமல் இந்த மக்களின் தேவைகளிலும்,நலன்களிலும் கவனம் செலுத்தி அவற்றை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.இது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய மனிதாபிமானப் பணியாகும் என்று அந்த மதகுரு மேலும் கூறினார்.

முன்னாரில் ஒரு குறிப்பிட்ட சிறிய பகுதிக்குள் அடைபட்டுக்கிடக்கும் இந்தச் சிறுவர்களும்,இளைஞர் யுவதிகளும் தென் பகுதியில் உள்ள தமது வயதினரைச் சந்தித்து தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.இதை நிச்சயம் நிறைவேற்றித்தரப் போவதாக சமாதானம் மற்றும் நிரந்தர அபிவிருத்திக்கான இயக்கத்தின் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி ஏ.ஜேசுதாஸன் இந்தச் சிறுவர்களுக்கும் இளைஞர்கள், யுவதிகளுக்கும் உறுதியளித்துள்ளார்.

**மெலனி மானல் பெரேரா**

# மனிதாபிமானத்தை யாரும் எந்த நேரத்திலும் நினைவு கூறலாம்.

ஆழிப் பேரலையைப் பற்றி அறிந்திராத மக்கள் இதுதான் ஊழிக்காலமா என்று எண்ணினார்கள். காற்றில்லை கடும்மழை ஏதும் இல்லை. காலநிலை என்றும் போலவே இருந்தது காலநிலையில் எந்தக் கடுமையான நிலையையும் ஏற்படுத்தக் கூடிய அறிகுறி ஏதும் இல்லை. என்றும் போலவே இன்றும் ஆதவன் தன் பொற்கிரணங்களை பரப்பிக் கொண்டு கீழ்வானில் உதித்து மெல்லமெல்ல மேலெழுந்து பிரகாசமாக வளர்ந்து கொண்டிருந்தான்.

மக்களும் வழமைபோல் தத்தமது அன்றாட கடமைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டனர். மறுநாள் கிறிஸ்துமஸ் பண்டிகை என்பதாலும், அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதாலும் பலர் ஆயாசமாக விடுமுறையைக் கழிப்பதற்கும், தொடர்ந்து ஐந்து நாட்கள் காரியாலயம், கடமை என்று அலைந்தவர்கள் அன்று தமது குடும்பத்துடன் பிள்ளைகளுடன் அன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தனர்.

வேலைக்குச் செல்ல வேண்டிய அவசரம் இல்லாததால் கணவன்மார்கள் என்றபடி , மனைவிமார்கள் போட்டுத் தந்த தேநீரைக் குடித்து விட்டு பிள்ளைகளுடன் விளையாட்டிக் கொண்டிருந்தனர், இன்னும் சிலர் தொலைக்காட்சிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது பலர் அழுவதும், கூக்குரல் இடுவதுமான கூச்சல் சத்தம் கேட்டது அதுவே பலரது மரண ஓலமாக உரத்த கத்தலாக தெளிவாக கேட்டது. எமன் தனது பாசக் கயிறுடன் பின்னால் துரத்த பலர் முண்டியடித்துக் கொண்டு ஓடிக் கொண்டே ஓடுங்கள், ஓடுங்கள் என்று கத்தினர். இன்னும் சிலர் தண்ணீர் வருகிறது ஓடுங்கள் என்றனர். வேறு சிலர் கடல் வருகிறது ஓடுங்கள் என்று கத்தினர். கடல் கொந்தளிக்கிறது, கடல் தண்ணீர் வீட்டுக்குள் வந்து விட்டது பனை, தென்னை உயரம் அலையடிக்கின்றது என்று பலவாறு ஓலமிட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள். பலரை அந்த கடல்நீர் காவு கொண்டது. தப்பி வந்தவர்கள் ‘என்மகனைக் காணவில்லை, கணவனைக் காணவில்லை’, என்றபடி அக்கா, தம்பி, குழந்தை என்று பல உறவுகளை உயிருடன் கடல் அல்லிக் கொண்டு போவதைக் பார்த்து கொண்டு கதறி அழுதவாறே ஓடினார்கள். பின்னால் வரும் பேய் அலை தன்னையும் விழுங்கி விடும் என்ற பயத்தில் திரும்பிப் பார்க்காது ஓடினார்கள். பலர் கத்தும் மரண ஓலத்தையும் மீறிக் கொண்டு கடல் அலை ஓவென்ற சத்தத்துடன் தென்னை, பனை வீட்டுக்கூரை அளவு உயரத்திற்கு மேலெழுந்து ஊருக்குள் வெகு வேகமாக ஊடுருவிக் கொண்டு ஊழித் தாண்டவம் ஆடியபடி வந்தது. அவ்வாறு வரும் போது அகப்பட்ட அனைத்தையும் அல்லிச் சுருட்டிக் கொண்டு வேகமாக ஓடி வந்த கடல் அலைக்கு முன்னால் ஓடுங்கள், ஓடுங்கள், என்று கத்திக்கொண்டு ஓடி வந்த பலர் ஓட முடியாதவாறு அவர்களை அப்படியே தூக்கி வீட்டுக் கூரைகளிலும், தென்னை, பனை மரங்களின் உச்சியிலும், வேறு மரக் கிளைகளிலும், மின்சார தந்திக் கம்பங்களின் மேலும் துவைத்து காயப் போட்டபடி மீண்டும் கடலை நோக்கி ஓடிவந்தது பிணமாகிப் போனவர்களைப் பின்தள்ளிவிட்டு உயிருடன் உள்ள பலரை இழுத்துக் கொண்டு கடலுக்குள் சென்ற நீர் ஒரு சில சடலங்களை கரை ஒதுக்கி இருந்தது. பலரது உயிர் அற்ற சடலங்களையும் எடுத்துச் சென்றிருந்தது.

உயிர் தப்பிய பலர் தமது உறவுகளைத் தேடி ஓலமிட்ட வண்ணம் ஊருக்குள் இருந்து கடலை நோக்கி ஓடினார்கள் தலை, கால் புரியாது பயத்தில் தவித்த மக்கள் தங்களை சுதாகரித்துக் கொண்டு சுற்றத்தார்களை தேட முறயற்சிக்கும் வேலை முதல் அலை ஓய்ந்து சில நிமிடங்களின் பின்னர், மீண்டும் ஒரு பேரலை தோன்றி ஊருக்குள் வந்து பேரழிவை செய்து விட்டு அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு வேகமாக கடலுக்குள் சென்று ஓய்ந்தது. முதல் அலையால் அல்லிச் சென்றவர்களின் பிணங்களைத் தந்து விட்டு பல புதிய உயிர்களை எடுத்துச் சென்ற அலை சற்று ஓய்ந்தது. மக்கள் அலை அலையாக கடற்கரை நோக்கி ஓடி வந்தனர். தத்தமது உறவினர், பிள்ளைகள், கணவன்மார்கள் மனைவிமார்கள் என்று காணாமல் போன உறவினர்களைத் தேடி எழுப்புகின்ற அழுகையும், கூக்குரலும் கேட்பவர் உள்ளத்தை உழுப்பி எடுத்தது ஏறக்குறைய இருபது, முப்பது நிமிடங்களுக்குள் எல்லாம் முடிந்த விட்டது. கிருஸ்துமஸ் பண்டிகை மறந்துபோனது எங்கும் அழுகையும், கூக்குரலும் அவலமும், பயமும் நடுக்கமும், தான் தென்பட்டது. திரும்பும் திசையெல்லாம் பிணங்களும் குற்றுயிராக பலரும் கிடப்பதைப் பார்த்து பலர் மயங்கி வீழ்ந்தனர். சிலர் புத்தி பேதளித்து தடுமாறினார்கள். என்ன செய்வது என்று தவித்தனர். அந்த ஊரே மயானமாக காட்சியளித்தது.

இது ஊழிக்காலம் இல்லை. உலகம் அழியவும் இல்லை. இது எங்களுக்கு மட்டுமே ஏற்பட்ட அவலம் என்று எண்ணி கதிகலங்கிய மக்கள் அடைக்கலம் தேடினர். இனிமேல் ஆபத்து இல்லை என்ற நிலை ஓரளவு உறுதியானதும் அவர்களது உறவினர்களைத் தேடி கண்டவர்களிடம் விசாரிக்க ஆரம்பித்தனர். அவ்வாறு தமது உறவினர்களைத் தேடியவர்கள் அவர்களது சடலங்களைக் கண்டதும் மயங்கி வீழ்ந்தனர் தலையில் அடித்துக் கொண்டு தரையில் புரண்டு கண்ணீர் விட்டு கதறி அழுதனர். ஆக்காட்சியைக் கண்டவர்கள் எவ்வளவு உறுதியான மனம் படைத்தவர்களாக இருந்தாலும் ஒரு கனம் துயரத்தில் அவர்களது உள்ளம் கரைந்து விடும். மனித உள்ளத்தைப் பிழிந்து எடுக்கக் கூடிய துக்கமான, துயரமான சோகமான துன்பமான நிலை. அதன் கொடுரத்தை நேரில் பார்த்தவர்களுக்கே புரியும்.

தனது குடும்பத்தார்களுக்கு என்ன நடந்தது என்பதைப் புரியாத என்ன நடந்திருக்கும் என்று அனுமானிக்க முடியாத ஒரு அபலைப் பெண் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார். அவ்வாறு ஓடியவளின் தோலிகளில் ஆறுமாதக் கைக்குழந்தையும் கிடந்தது. என்ன நடக்கின்றது என்பதைப் புரியாத அந்த பிஞ்சு உள்ளமும் தனது தாயின் சோகத்தில் பங்கு கொள்வது போல விம்மி விம்மி அழுதது. தனது குடும்பத்தவர்கள் யாரையும் காணாத போதும் அந்த ஆறுமாத பிஞ்சு தன் தோலில் கிடப்பது சற்று ஆறுதலாக இருந்திருக்கும் அப்பெண்ணுக்கு தன் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற ஆறேழு பேருக்கும் என்ன நடந்திருக்கும் என்ற தகவல் ஏதும் அறியாத பயம் ஒரு புறம், எதுவும் நடந்திருக்காது எங்காவது இருப்பார்கள் என்ற நம்பிக்கை மறுபுறம் இரண்டுக்கும் மத்தியில் நடைபிணமாக நடந்தாள் அந்தப் பெண். விடுமுறை நாள் என்பதாலும் வீட்டில் இருக்கும் நாள் என்பதாலும் சாதாரண உடையில் இருந்த

பெண்கள் சகலமும் ஓய்ந்த பின்னர் சங்கடப்பட்டனர். "நைட்டீ" என்ற உடை நன்றாகவே நனைந்து விட்டதால் அந்த சங்கடம் அவளுக்கும் இருந்தது. அவள் தன் உறவினர்களைத் தேடுவது போலவே பலரும் அங்கு கூடி வந்து எல்லா இடங்களிலும் தேடினார்கள். அவருக்கும் தனது பெற்றோர், கணவன், குடும்பத்தார் என யாரையும் காணாத தவிப்பு தானும் தேடவேண்டும் அதற்கு தன் உடையும், தோலில் கிடந்த குழந்தையும் தடையாக இருப்பதை உணர்ந்தாள். அவளுக்கு உடனடியாக உடை மாற்றிக் கொள்ள வேண்டும், அடுத்து தனது குழந்தையைப் பார்த்துக் கொள்ள யாராவது வேண்டும், இவ் இரண்டு பிரச்சினைக்கும் விடை கூறுவது போல அவள் நின்ற இடத்துக்கு சற்று தொலைவில் நின்று கொண்டு தனக்குக் கீழ் கடமையாற்றிய இருபதுக்கு மேற்பட்ட இராணுவ சிப்பாய்கள் கடல் அலையில் சிக்கித் தவித்த மக்களைக் காப்பாற்றப் போய் தமது உயிரைப் பறி கொடுத்தவர்களை இழந்த சோகத்தில் ஆழ்ந்திருந்தார். ஒரு இராணுவ உயர் அதிகாரி அவர் அப் பெண்ணிடம் வந்து நின்றார், அவளும் தயக்கத்துடன் தன் இரண்டு பிரச்சினைகளையும் சோகம் நிறைந்த விழிகளால் வெளிப்படுத்தினாள். அனுபவம் மிக்க அந்த அதிகாரி அவளிடம் இருந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டு தனக்கு முன் கிடந்த பெரிய மேசை மீது கிடத்தி விட்டு அப் பொண்ணைப் போய் உடை மாற்றிக் கொண்டு வருமாறு கேட்டுக் கொண்டார். முதலில் சற்று தயங்கிய அவ்விளம் தாய் வேறு வழி இன்றி அவ்வாறே செய்தாள் அப் பிஞ்சுக் குழந்தையும் நிலைமையைப் புரிந்து கொண்டு அமைதியாகவே மேசை மீது கிடந்தது. முழுவதும் நனைந்த உடலோடு ஒட்டிக் கொண்ட ஆடையை மாற்றிக் கொண்டாள்தான் சனங்களுக்கு மத்தியில் அவளால் நடமாட முடியும், எனவே வேகமாக ஓடினாள். ஊர் பக்கமாக ஓடி குடிமனைகள் இருந்த பகுதியில் தனக்குத் தெரிந்த ஒருவரது வீட்டில் நுழைந்து தனக்கு ஒரு உடை வேண்டும் என்று கேட்டு பெற்றுக்கொண்டாள் அனைத்தையும் இழந்து, அல்லலுற்ற வேளையில் தனக்கென மிஞ்சியிருந்த தன் பிஞ்சுக் குழந்தையையும் முன்பின் அறியாத தமிழர்களின் எதிரிகள் எனப் பார்க்கும் இராணுவத்தினரிடம் விட்டு விட்டுப் போன சோகம் அவள் இதயத்தைப் பிழிந்தெடுத்தது. ஓடிச் சென்ற வேகத்தில் உடை மாற்றிக் கொண்டு திரும்பி ஓடி வந்தவள் வழியில் கண்ட அனைவரிடமும் தனது பெற்றோர், நண்பர்கள், பகைவர்கள், உறவினர்கள் என்று சகலரையும் தேடினாள். மிக நெருக்கமாக பழகிய பலர் பக்கத்து ஒழுங்கையில் வசித்தவர்கள் இறந்து பிணமாகக் கிடப்பதைக் கண்ட அவள் தனது குடும்பத்தார்களும் அவ்வாறு இறந்து கிடப்பார்களே என்று எண்ணி விம்மி விம்மி அழுது கொண்டே தேடினாள் தமது குடும்பத்தார்கள் இறந்து விட்டார்கள் என உறுதியாக நம்பிய போது தனக்கென மிஞ்சிய பிஞ்சுக் குழந்தையை உடன் பார்க்க வேண்டும் என்ற வேகத்தில் ஓடினாள். சோகமும் விரக்தியும், பயமும், கவலையும் கொண்ட உள்ளத்தோடு பேயறைந்தவள் போல தலைவிரி கோலத்தில் தனது குழந்தையை விட்டுச் சென்ற இடத்தை அடைந்தாள் அங்கே தன் குழந்தையைக் காணவில்லை. அந்த இராணுவ அதிகாரியையும் காணவில்லை, கேட்பதற்கோ, விசாரிப்பதற்கோ, யாரையும் காணாததால் கலக்கமும், பதட்டமும் அடைந்தாள். இது என்ன சோதனை எண் கண்மணி எங்கே? மீண்டும் ஒரு பேரலை வந்து என் பிள்ளையையும் எடுத்துச் சென்று விட்டதா என எண்ணிய போது நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது. கத்திக், கதறி கண்ணீர் விட்டவள் பித்துப் பிடித்தவள் போல் அங்கும் இங்கும் ஓடினாள் தன் கண்மணிக் குழந்தையைத் தேடினாள் படை அதிகாரிகள் தங்கும் விடுதிக்குள் செல்ல அச்சம் கொண்டு தயங்கி நின்று ஒவென கதறி அழுதாள் அதற்கு மேல் அவளால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை சோகத்தில் துவண்டு போனவளின் கண்கள் இருண்டன, பாதி மயக்க நிலையை அடைந்தாள் இதோ விழுந்து விடப் போகிறேன் என்ற நிலையை அடைந்த போது தனக்குப் பின்னால் இருந்து அந்த இராணுவ அதிகாரியின் குரல் கேட்டது திடுக்கிட்டவள் திரும்பிப் பார்த்தாள்.

"வந்தாச்சா" என்றார் அந்த அதிகாரி குரல் கேட்ட பக்கம் திரும்பிப் பார்த்த போது அந்த படை அதிகாரியின் கரங்களில் எதுவுமே நடக்காதது போல் சிரித்துக் கொண்டிருந்தான் அந்தப் பாலகன் இருண்டு கொண்டு வந்த கண்கள் பிரகாசமாகின. தன்னுடைய வாழ்வு அவர்கைகளில் கிடப்பதைக் கண்ட அவள் ஓடிச் சென்று தனது குழந்தையை வாரி அனைத்துக் கொண்டாள். தன்னுடன் வேலை செய்து கொண்டிருக்கும் போது அவ்வூர் தமிழ்மக்களை சுனாமியிலிருந்து காப்பாற்றுவதற்குச் சென்ற இருபதுக்கு மேற்பட்ட சிங்கள சிப்பாய்கள் சுனாமியால் அள்ளிச் செல்லப்பட்டிருந்த சோகத்தில் இருந்த அப்படை அதிகாரியின் முகத்திலும் ஒரு சிறிய புன்னகை இளையோடிச் சென்றது.

கைகளில் அள்ளிக் கொண்ட குழந்தையை கண்களில் ஏற்றிக் கொண்டவள் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனாள். அவள் தன் குழந்தைக்குப் போட்டிருந்த உடை மாற்றப்பட்டு வேறு பெரிய காற்சட்டை போடப்பட்டு மேல் உடை களற்றப்பட்டு வெறும் உடம்புடன் கிடந்த தன் மகனைக் கண்டவளுக்கு ஓரளவு என்ன நடந்திருக்கும் என ஊகிக்கக் கூடியதாக இருந்தது. இருந்தும் தனது குழந்தையை அவ்வளவு நேரம் பாதுகாத்துத் தந்த அந்த அதிகாரியை நன்றியுடன் திரும்பிப் பார்த்தாள். அவளின் பார்வையைப் புரிந்து கொண்ட அதிகாரி மெதுவாக கூறினார் அவரது அரைகுறை தமிழில் கூறியவற்றைப் புரிந்து கொண்ட பெண் நன்றியோடு அவரைப் பார்த்தாள். அவள் விட்டுச் சென்ற சிறிது நேரத்தில் பிள்ளைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டு உடை அழுக்காகி இருந்தது. அதைக் கழற்றி எரிந்து விட்டு தனது முகாமில் உள்ள படை அதிகாரியின் பிள்ளையினுடைய ஒரு காற்சட்டையை உடுத்திவிட்டிருந்தார். அது அவனை முழுவதுமாக மூடிக் கொண்டிருந்தது.

தனது பிள்ளையை கழுவி குளிப்பாட்டி விட்டு புதிய உடை மாற்றி தன்னிடம் கொடுத்த அந்த அதிகாரியின் செயலை அறிந்த அவள் பூரிபடைந்தாள். கண்கள் ஆனந்தத்தால் நீர் சொரிந்தன. அப்படியே அவரது கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கத்தி அழ வேண்டும் போல் இருந்தது. இருந்தாலும் இதுவரை காலமும் சிங்களவர், இராணுவத்தினர், கூலிப்படை, தமிழ் இனத்தை அழிக்க வந்தவர்கள் என்று எண்ணிப் பயந்து நெருங்கிப் பழக முடியாது ஒதுங்கி வாழ்ந்து பழக்கப்பட்டிருந்ததால் ஏற்பட்ட ஈகோ எனப்படும் உணர்வு தடுத்து விட்டது. என்றாலும் மானசீகமாக அவரின் காலடியில் தான் விழுந்து கிடப்பதை அவளது மனச்சாட்சி மறுக்கவில்லை.

இவ்வாறு இரும்பு என எண்ணிக் கொண்டிருக்கும் இதயத்துள் இருக்கும் கருணையால், இதமான அரவணைப்பை அனுபவித்தாலும் இனவாதம் கலந்த இதயங்கள் மட்டும் அதை ஒத்துக் கொள்வதில்லை.

ஆழிப் பேரலை ஏற்படுத்திய அவலங்கள், அதன் சுவடுகள் மெதுவாக மறைந்து கொண்டிருந்தாலும் அன்று நடந்த மனிதாபிமானச் செயல்கள் மனதை விட்டு மறைவதில்லை என்பதை நினைவூட்ட நான்கு ஆண்டுகளுக்கு முன் நடந்த உண்மைச் சம்பவம் உணர்வுகளைத் தூண்ட வேண்டும் என்பதற்க்காகவே மீண்டும் அசைபோடப்பட்டது.

**வைத்தியலிங்கம்**



# இயலாமை என்று ஒன்று இல்லை எல்லாம் இயல்பானதே

solidar INGO consortium

Norwegian People's Aid ASB Swiss Labour Assistance SAH

"வாழ்க்கை பெரும் தியாகங்களாலும்,கடமைகளாலும் உருவாக்கப்பட்டதல்ல. அது புன்னகையாலும்,கருணை மிக்க வார்த்தைகளாலும்,கருணைமிக்க செயல்களாலும் உருவாக்கப்பட்டது."

பிரீதிபுர பிரதேசத்தில் வாழும் சமூகத்தவர்களின் வாய்களில் இருந்து உதிரும் பொன் மொழிதான் இது.இலங்கையில் அங்கவீன முற்றநிலையிலும்,மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலும்,கைவிடப்பட்ட நிலையிலும் உள்ள சிறியவர்களுக்கும்,முதியவர்களு க்கும்புகலிடம் அளிக்கும் இடம் தான் பிரீதிபுர.பொதுவாக இவர்கள் பிரீதிபுர சமூகத்தவர்கள் என்றே அடையாளம் காணப்படுகின்றனர்.இவர்களுக்கு இங்கு பராமரிப்புக்கள் வழங்கப்படுவதோடு கல்வி,மற்றும் பயிற்சிகள் உட்பட புனர்வாழ்வுத் திட்டங்களும் அமுல் செய்யப்படுகின்றன.கடந்த சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பணி தொடருகின்றது.டொக்டர்.பிறயன் டி கிறஸ்டர் என்ற தனவந்தரால ஸ்தாபிக்கப்பட்டதே பிரீதிபுர.மகிழ்ச்சிப் பிரதேசம் என்பது தான் இதன் பொருள். குடும்பங்களால் கைவிடப்பட்டு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களே இங்கு தஞ்சமடைந்துள்ளனர்.இலங்கை கயில் இவ்வாறு ஆதரவற்றவர்களுக்கு அன்பு செலுத்தும் அமைப்புக்கள் ஒரு சிலவே உள்ளன..ங்குள்ள சிறுவர்களுள் அநேகமானவர்கள் தமது பெற்றோரால் கைவிடப்பட்டவர்கள்.சிறுவர்களைப் பொறுத்த மட்டில் கல்வி,பயிற்சி மற்றும் புனர்வாழ்வு என்பன முடிவடைந்த பின்பும் கூட தங்களால் சமூகத்துக்குத் திரும்பிச் செல்ல முடியுமா என்ற நம்பிக்கை குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இங்குள்ளவர்களுள் பெரும்பாலானவர்கள் குழந்தைகளும், சிறுவர்களும், இளவயதினரும் ஐம்பது வயது மிதிக்கத்தக்கவர்களும் இங்குள்ளனர்.எந்த வயதாகினும் சரி இது எல்லோருக்கும் பிரீதிபுர தான்.

பிரீதிபுர சமூகம் என்பது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒரு நன்கொடை அமைபபு.இது இலாபநோக்கற்ற,அரசசார்பற்ற அமைப்பு.இனம்,மதம் அல்லது நிதி வசதிகளைப் பாராமல் எல்லோருக்கும் உதவும் ஒரு அமைப்பு.முற்று முழுக்க நன்கொடையாளர்களில் தங்கியிருக்கும் இந்த அமைப்பு விவசாய செயற்பாடுகள் மூலமும் சில வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றது.இதன் சேவைகளைப் பயன் படுத்துபவர்களிடமிருந்து எந்த கட்டணமும் எதிர்பார்க்கப்படுவதில்லை. பிரீதிபுரவுக்கு நிதி உதவி வழங்கும் பிரதான அமைப்புகளில் ASB/சொலிடாடும் ஒன்றாகும்.தற்போது ஹெந்தலையில் உள்ள பிரீதிபுரவில் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஒன்றுக்கான கட்டிட நிர்மாண வேலைகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகின்றது.

பிரீதிபுர சமூகம் என்ற குடையின் கீழ் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் நான்கு நிலையங்கள் செயற்படுகின்றன.இயலாமை காரணமாக பல்வேறு மட்டத்தில் பாதிக்கப்பட்ட பல்வேறு தரப்பினருக்கும் இங்கு வாழத் தகுந்த விரிவானதோர் சூழல் ஏற்படுத்தப்படுகின்றது.பிரீதிபுர சமூகத்தில் வாழ்பவர்கள் எதிர்கால சமூகப் பங்களிப்புக்களை வழங்கக் கூடியவர்கள்களாக சவால் மிக்க ஒரு சூழலில் இங்கு உருவாக்கப்படுகின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் ஹெந்தலை பிரதேசத்தில் 1963 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பிரீதிபுர குழந்தைகள் இல்லம்,அவ்வாறான முதல் நான்கு நிலையங்களில் ஒன்றாகும். மனோரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்படடு மோசமான இயலாமைக்குள்ளான சிறுவர்கள் இங்குள்ளனர்.ஓரளவு இயலாமை உள்ள ஆனால் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள சிறுவர்களுக்கும் இங்கு புகலிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இன்று பிரீதிபுரவில் உள்ள ஐந்து பிரதான கட்டிடங்களில் அல்லது"இல்லங்களில்" 86 பேர் வசிக்கின்றனர்.இவர்கள் அவர்களின் வயது,ஆற்றல் மற்றவர்களோடு பழகும் இயல்பு என்பனவற்றின் அடிப்படையில்



குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். பராமரிப்பாளர்கள் மற்றும் தொண்டர்களால் இவர்களுக்குத் தேவையான அடிப்படைப் பராமரிப்பு,சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு என்பன வழங்கப்படுகின்றன.இவற்றுக்கு மேலதிகமாக உடற்பயிற்சி,செயலமர்வுகள் மற்றும் தொழிற்சார் பயிற்சிகள் என்பனவும் அளிக்கப்படுகின்றன. பிள்ளைகளின் அடிப்படைத் தேவைக்கு அமைய இவை வழங்கப்படுகின்றன.இங்கு ஒரு நீச்சல் தடாகமும் உள்ளது சிகிச்சை,உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுத் தேவைக்காக இது பயன்படுத்துகின்றது.இங்கு 20 அக்காமார் களும்,தங்கைமார்களும்,வேறுவிதமாகக் கூறுவதாயின் நிரந்தரத் தொண்டர்கள் உள்ளனர்.இவர்களுள் அக்காமார் .இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராமப் பெண்கள்.பராமரிப்பு உதவியாளர்களாக இவர்கள் பணிபுரிகின்றனர்.தங்கைமார் இந்த இல்லத்திலேயே நீண்ட காலம் வசிப்பவர்கள்.பிரீதிபுர சமூகத்தின் பராமரிப்பில் ஒரு காலத்தில் இருந்தவர்கள் கடந்த 40 ஆண்டுகளில் இந்த இல்லத்துக்கு உலகம் முழுவதிலும் இருந்து தொண்டர்கள் பலரும் வந்து சென்றுள்ளனர் இவர்கள் தமது பெறுமதி மிக்க நேரகாலத்தை ஆலோசனைகளுக்காகச் செலவிட்டுள்ளதோடு உள்ளூர் ஊழியர்களின் பணிகளிலும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

## அசேகபுர பண்ணை மற்றும் கொடகலை பாடசாலை

அசேகபுர பண்ணை 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.கேகாலை மாவட்டத்தில் இது அமைந்துள்ளது.பிரீதிபுர சமூகத்தின் இரண்டாவது கிளையாக இது அமைந்துள்ளது.இதனைத் தொடர்ந்து 1981 இல் கொடகலைப் பாடசாலை உருவாக்கப்பட்டது.இவ்விரண்டு நிலையங்களிலும் ஆண்கள்,பெண்கள் என சுமார் 100 போர் வசிக்கின்றனர்.சமூக சேவைகள் திணைக்களம்,ஹெந்தலையில் உள்ள பிரீதிபுர இல்லம் மற்றும் ஆனந்தபுர பண்ணை ஆகியவற்றின் சிபார்சின் பேரில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களே இங்குள்ளனர்.

இங்குள்ள இயலாமைக் குறைவான பிள்ளைகளுக்கு கல்வி வசதிகள் அளிக்கப்படுகின்றன.அத்தோடு இங்குள்ளவர்களுக்கு கைப்பணி பயிற்சி,இறப்பர் பால் எடுத்தல்,காணிகளில் வேலை செய்தல் ஆகிய பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.கொடகலைப் பாடசாலையில் மூன்று முதல் 14 வயது வரையான 70 மாணவர்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் அரசாங்க பாடவிதானத்துக்கு ஏற்ப பாடங்கள் போதிக்கப்படுகின்றன.விவசாய கற்கைகள ,கைப்பணிப்பயிற்சி என்பனவற்றில் கூடிய கவனம் செலுத்தப்படுவதோடு இசை ,நடனம்,சமயல்கலை என்பனவற்றைப் பயிலவும் வாய்பளிக்கப்படுகின்றது.

சுதந்திரமான வாழ்வாதார ஆற்றல்களை விருத்தி செய்வதுதான் இந்த நிலையங்களின் பிரதான குறிக்கோள். ஆற்றல் விருத்தியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளை அளிப்பதன் மூலம் நீண்ட கால அடிப்படையில் சமூகத்தின் பரவலான பிரிவுக்குள் இந்த மாணவர்கள் இலகுவாக கலந்து விட முடியும்.இங்குள்ள சிறுவர்கள் அவ்வப்போது தமது இசை ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றனர்.இலங்கை முழுவதும் நாடகங்களை நடத்துவதிலும்,கண்காட்சிகளை நடத்துவதிலும் இவர்கள் பங்கேற்று வருகின்றனர்.அத்தோடு உளளூர் மட்டத்திலும்,சர்வதேச மட்டத்திலும் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று வருகின்றனர்.

பிரீதிபுரவின் ஒருபகுதயில் 2003 ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கைப்பணித் தொழிற்சாலை மிகவும் பிரயோசனமான முறையில் செயற்பட்டு இங்குள்ளவர்களுக்கு மாதாந்த வருமானம் ஒன்றையும் அளிக்கின்றது. கொழும்பிலுள்ள சில்லறை வர்த்தகர்களோடு இணைந்து செயல் படுவதன் மூலம் இங்குள்ளவர்களின் ஆற்றல் அறிந்து,வர்த்தக தேவையறிந்து பணியாற்றமுடிகின்றது இங்குள்ளவர்களின் இயலாமையில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக அவர்களின் ஆற்றலிலேயே கூடுதல் அவதானம் செலுத்தப்படுகின்றது.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஆனந்தபுர பண்ணை 1978 இல் ஸ்தாபிக்கப்பட்டது.பௌதிக ஆற்றல் குறைந்தவர்களின் தொடர்ச்சியான வள ர்ச்சிக்கும்,அபிவிருத்திக்கும் ஏற்ப சூழல் இங்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.பல பிரதேசங்களைச் சேர்ந்த பௌதிக ஆற்றல் குறைந்தவர்கள் இங்குள்ளனர்.பொருள் உற்பத்தி,பயிர் உற்பத்தி,கால்நடை வளர்ப்பு என பல பணிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற

ன.இப்போது இங்கு சுமார் 46 பேர் வசிக்கின்றனர்.ஆற்றல் மிக்கவர்களும்,சுதந்திரமாக இருக்கக் கூடியவர்களும் தனியாக வாழ்வதற்கான வசதிகள் இங்கு வழங்கப்பட்டுள்ளன.



இந்த 12 ஏக்கர் தென்னந்தோப்பில் கால் நடை வளர்ப்புக்கான வசதிகளும் உள்ளன.ஓரளவு இயல்பு நிலையில் உள்ளவர்கள் இங்குள்ள மிருகங்களைப் பராமரித்து வளர்ப்பதில் உதவி வருகின்றனர். விவசாயத்திலும் இவர்கள் ஈடுபடுகின்றனர்.இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களுள் இங்கு வசிப்பவர்களின் நுகர்வு போக எஞ்சியவை விற்கப்படுகின்றன.பண்ணைச் செய்கை,கல்வி,மற்றும் தனிநபர் ஆரோக்கியச் செயற்பாட்டில் இங்குள்ள வதிவிட உதவியாளர்கள் உதவி புரிந்து வருகின்றனர்.இங்குள்ள பண்ணையில் தொழில் புரிந்து கொண்டு இங்கு வசித்துவருபவர்கள் தான் பண்ணை நிர்வாகத்துக்கும் பொறுப்பாக உள்ளனர். இவர்கள் பெரும்பாலான காரியங்களை இங்கு தமது சொந்த முயற்சியினாலேயே மேற்கொள்கின்றனர். மேற்பார்வை மட்டுமே இங்கு தேவைப்படுகின்றது.



வாரத்தில் இரண்டு நாட்கள் இங்குள்ளவர்கள் கொடகலை நிலையத்தில் மேற்கொள்ளும் கழிவுக் கடதாசிகளை மீள் சுற்றுக்கு உட்படுத்தி வாழ்த்து அட்டைகளைத் தயாரிக்கும் பணியிலும் பங்கேற்கின்றனர். தேங்காய் தும்பிலிருந்து பிரஷ் களைத் தயாரிக்கும் பணியும் இங்கு இடம்பெறுகின்றது.



பிரீதிபுர சமூகத்தோடு மிக அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இடம் தான் காலி நிலையமாகும்.இது காலி மாவட்டத்தின் உனவடுன பிரதேசத்தில் அமைந்துள்ளது.இது சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு நிலையமாகும்.சிறிய அளவில் இயலாமை உள்ளவர்களுக்கு இங்கு மேலும் சுதந்திரமாக வாழக்கூடிய பயிற்சி அளிக்கப்படுகின்றது.காலி நிலையத்தில் எழு பேர் வசிக்கின்றனர்.இவர்கள் தமது வழமையான செயற்பாடுளுக்கு மேலதிகமாக புடவை நெய்யும் பணியில் ஈடுபட்டு மாதாந்த வருமானம் ஒன்றையும் ஈட்டிக்கொள்கின்றனர்.இவர்கள் பெரும்பாலும் இயல்பானவர்கள் என்பதால் இவர்களுக்கான பாரமரிப்பும் கண்காணிப்பும் குறைவாகவே இருக்கின்றன. அவ்வப்போது பராமரிப்பு அதிகாரிகள் மட்டும் விஜயம் செய்கின்றனர்.இவர்கள் உளளூர் சமூகத்தவர்களோடு நல்ல உறவுகளை ஏற்படுத்தியுள்ளனர். நீண்டகால அடிப்படையில் இலக்குகளை நிறைவேற்றக் கூடிய ஆற்றல்களையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்று இலங்கையில் சுமார் 1,500,000 பேர் இயலாமைகளுடன் இருப்பவர்களாக மதிப்பிடப்பட்டுள் ளது.இவர்களுள் 90% மானவர்கள் கிராமப் புறங்களில் வசிக்கின்றனர். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இயலாமைக்கான மூலகாரணம் வறுமையெனக்கண்டறியப்பட்டுள்ளது. வறுமையின் விளைவாக ஏற்படும் போஷாக்கின்மை,நோய்கள்,மோசமான குடிநீர்,முறையற்ற சுகாதாரம், விபத்துக்கள் மற்றும் ஆயுதமோதல்கள், மரபியல் ஒழுங்கீனங்கள் என்பனவும் இதற்குக் காரணமாகின்றன.இயலாமையால் பாதிக்கப்பட்ட ஒருவரை குடும்பத்தவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்பது பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வரும் ஒரு முறையாக உள்ளது.ஆனால் கிராமப்புறங்களில் வறுமை நிலை காரணமாகவும் அறிவீனம் மற்றும் புனர்வாழ்வு வசதியீனம் என்பன காரணமாகவும் இவர்களுக்கு வீடுகளில் புனர்வாழ்வளிக்க முடியாதுள்ளது.இவர்கள் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் நலன் புரித் திட்டங்களில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.பிரீதபுரவின் 40 வருட வரலாற்றில் பிரீதிபுர சமூகத்தின் மூலம் 900 த்துக்கும் அதிகமான இயலாமையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும், பெரியவர்களும் நன்மையடைந்துள்ளனர். விஷேடமாக கிராமபுறங்களில் இயலாமையால் பாதிக்கப்பட்ட அநேகமான மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் வித்தியாசமான ஆற்றல் உள்ள இந்தச் சிறுவர்களுக்கும்,வளர்ந்தவர்களுக்குமான ஆதரவுகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன. பிரீதிபுர சமூகம் இப்போது நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றது.தனிப்பட்டவர்களின் வளர்ச்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி என்பனவற்றுக்கான முழு வாய்ப்பும் இங்கு வழங்கப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு : www.prithipura.org




# புத்தாண்டில்,புதுவீடுகளில்,புத்தொளி 640 பேரின் ஆயுள்கால கனவு நனவானது

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பாதிப்புக்களுக்கான மக்களுள் 640 பேருக்கு 2008ஆம் ஆண்டில் விடிவு காலம் பிறந்துள்ளது.இவர்களின் அடிப்படை அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றான வாழ்விடத் தேவை இப்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.NPA/ சொலிடார் அறிமுகம் செய்த தாங்களே தங்களது வீடுகளைக் கட்டிக்கொள்ளலும் திட்டத்தின் கீழ் இந்த அடிப்படைத் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.தங்களுக்கு ஒரு புதிய வீடு கிடைக்க வேண்டும் என்ற கனவு நனவான நிலையில் இந்த மக்கள் இப்போது பூரிப்படைந்துள்ளனர்.சுமார் 30 வருடகால உள்நாட்டு யுத்தம்,அதன் நடுவே 2004 இல் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவு என்பனவற்றால் நிலைகுலைந்து போனவர்களே இந்த மக்கள்.இந்தப் பாதிப்புக்கள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் வதிவிடம்,உள்கட்டமைப்பு,சமூகப் பொருளாதார அபிவிருத்தி என்பன சமநிலை அற்றதாகவே காணப்பட்டன.வீடமைப்பைத் துறையைப் பொறுத்தமட்டில் இந்த மக்களுக்கான வாக்குறுதிகள் சரிவர நிறைவேற்றப்படாததால்,இவர்கள் தற்காலிகக் கொட்டில்களில் எதிர்பார்த்ததை விட நீண்ட காலம் வசிக்கவேண்டியதாயிற்று.இதனால் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத பிரிவினருக்கும் இடையில் கூட பதற்றமான சூழ்நிலைகள் தோன்றும் துரதிஷ்டவசமான நிலை ஏற்பட்டது.

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் NPA/சொலிடார் அமைப்பு,நோர்வே வெளிவிவகார அமைச்சின் அனுமதியைப் பெற்று வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சமூக மீள் கட்டமைப்புத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில்,செலவிடப்படாத பணத்தின் ஒருபகுதியை கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செலவிட முன்வந்தது.வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அங்கு மேற்கொள்ளப்படவிருந்த திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டு எஞ்சிய பணம் கிழக்கு மாகாண மக்களின் அபிவிருத்தித் தேவைக்காகச் செலவிடப்பட்டது.

வீடமைப்புப் பிரிவின் பங்காளிகள் மற்றும் நன்கொடையாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின், பல்வேறு தரப்பினரும் வழங்கிய தகவல்களை நன்கு ஆராய்ந்த பின்,ஏனைய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா.குடியிருப்புத்திட்டம் என்பனவற்றின் தரவுகள், தகவல்கள் என்பனவற்றின் அடிப்படையில் வீடுகளைக் கட்டிக் கொள்ளும் விடயத்தில் மக்களுக்கு என்ன தேவை என்பது இனம் காணப்பட்டது.மக்கள் தமக்குத் தாமே வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள ஆதரவு தேவைப்படுபவர்களாக உள்ளனர் என்பது இனம் காணப்பட்டது. வீடுகளை நன்கொடையாளர்கள் கட்டிக் கையளிப்பதை விட, உரிமையாளர்களைக் கொண்டே அவற்றைக் கட்ட வைப்பது மிகவும் வெற்றிகரமான ஒரு திட்டமாக இனம் காணப்பட்டது.இந்த திட்டத்துக்கான செலவினம், அதன் அமுலாக்கம்,அதன் நீடித்த ஆயுள் காலம் என எல்லாப் பிரிவிலும் இது மிகவும் சாதகமான ஒன்றாகக் கருதப்பட்டது.

சுனாமி பேரழிவையடுத்து விடுகளை நிர்மாணித்துக் கொள்ள ஆரம்ப கட்ட நிதியாக அரசாங்கம் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை வழங்கியிருந்தது.இது எந்த வகையிலும் போதுமான ஒரு தொகையாக அமையவில்லை.எனவே இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்து, தமது வீடுகளைப் பூர்த்தி செய்ய மேலதிக நன்கொடையாளர்களிடமிருந்து மக்கள் உதவியை எதிர்பார்த்திருந்தனர்.

இந்த திட்டத்தை அமுல் செய்வதற்கான பங்காளியாக ஐ.நா.குடியிருப்புத்திட்டம் தெரிவு செய்யப்பட்டது.இத்தகைய திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுத்துவதில் அதற்குள்ள ஆற்றலைக் கருத்திற் கொண்டே இந்தத் திட்டத்தின் பங்காளியாக அது தெரிவு செய்யப்பட்டது. NPA/சொலிடார் ஆரம்பகட்ட உதவியாக 190 மில்லியன் ரூபா செலவில் (1,900,000 அமெரிக்க டொலர்)475 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்துக்கு உதவியது.அதன் பிறகு மேலும் 165 வீடுகளை நிர்மாணிப்பதற்கான எதவிகளை NPA/சொலிடார் நேரடியாக வழங்கியது.2008 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இதற்கென 67,575,000 ரூபா (675,750 அமெரிக்க டொலர்கள்) செலவிடப்பட்டன.இந்த பயனாளிகளும் NPA/சொலிடாரின் தொழில்நுட்பக் குழுவால்,பிரதேசச் செயலாளர்களால் வழங்கப்பட்ட பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.இவர்களுக்கு மிகவும் அவசியமான தொழில் நுட்ப ஆதரவு,வழிகாட்டல்கள் என்பனவும் வழங்கப்பட்டன.ஐ.நா குடியிருப்புத்திட்ட தொழில்நுட்ப அதிகாரிகள்,மற்றும் சமூக ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்ட குழுவால் இந்தத் திட்டத்தின் அமுலாக்கம் கண்காணிக்கப்பட்டது.வீடுகளின்

தரம்,நிர்மாணப் பணிகளின் பொருளாதார நெகிழ்ச்சி,மற்றும் முன்னேற்றங்களை அடைந்து கொள்வது சம்பந்தமாக பயனாளிக்கு வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.

பிரதேசச் செயலாளர்,ஐ.நா குடியிருப்புத்திட்டம்.·. NPA/சொலிடார் மற்றும் பயனாளிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது.நிதி மோசடிகளைத் தவிர்த்தல்,குறிப்பிட்ட காலப் பகுதிகளுக்குள் பணிகளை நிறைவேற்றல் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு இந்த உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன.ஒவ்வொரு பயனாளிக்கும் அவரவருக்குரிய பணிகள் எதுவென தீர்மானிக்கப்பட்டு அதற்கமைய உரிய தொகைப் பணம் முன் கூட்டியே அவர்களது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது.வாராந்த அடிப்படையில் இந்தச் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொழில்நுட்பக் குழுவால் பரிசீலிக்கப்பட்டது.இவ்வாறாக ஒவ்வொரு பயனாளிக்கும் அவர் மேற்கொள்ளும் பணியில் தரம் எவ்வாறு பேணப்பட வேண்டும்.அது எவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் என்பது குறித்தும் அறிவூட்டப்பட்டது.நிர்மாணப் பணிகளின் எல்லா கட்டத்திலும் பயனாளிகளும் சமூக அபிவிருத்திக் குழுக்களும் இணைந்து பணியாற்றின.இந்த வகையில் உழைப்பு வழங்குவதில் மட்டுமன்றி சமூக அபிவிருத்தித் திட்டங்களின் திட்டமிடல் செயற்பாடுகளிலும் பயனாளிகள் ஒரு பங்காளியாகச் செயற்படும் நிலை உருவானது.இந்த வகையில் பயனாளிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் தான் இந்தத்திட்டத்தின் உரிமையாளர்கள் என்பதும் பாரிய அளவுக்கு உணர்த்தப்பட்டது.

ஐ.நா. குடியிருப்புத்திட்டம் NPA/சொலிடார் நிதிகளைப் பயன்படுத்தியதோடு சர்வதேசத தொழிலாளர் அமைப்பு மற்றும் யுனிசெப் நிறுவனம் என்பனவற்றில் இருந்து பெற்றுக் கொண்ட உதவிகளைக் கொண்டு இப்பிரதேச மக்கள் கால்நடைகளைப் பெற்று,யோகர்ட் மற்றும் பழச்சாறு உற்பத்திகளில் ஈடுபடவும் வழிவகுத்தது. அத்தோடு பொத்துவில் பிரதேச மக்கள் வெங்காயச் செய்கையில் ஈடுபடவும், திருக்கோயில் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசச் செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் வெங்காயச் செய்கையை மேற்கொள்ளவும் உதவியது.சமூக அபிவிருத்திக் குழுக்களின் முன்னுரிமைச் சிபார்சு,ஐ.நா. குடியிருப்புத்திட்ட வழிகாட்டல் மற்றும் NPA/சொலிடாரின் நிதி உதவி என்பனவற்றின் மூலம் கிட்டத்தட்ட 15,925,504.64 (கிட்டத்தட்ட 159,255 அமெரிக்க டொலர்) உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் செலவிடப்பட்டுள்ளது .திருக்கோவில் பிரதேசத்தில் சுனாமி பாதிப்புக்குள்ளான 95 பேருக்கும் திருக்கோவிலில் 36 பேருக்கும்,பொத்துவிலில் 59 பேருக்கும்,வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.இதற்கு மேலதிகமாக 35 ஆயிரம் ரூபா பண உதவியும் (சுமார் 350 அமெரிக்க டொலர்கள்) தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.

புத்தாண்டில் இவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.வெட்ட வெளிகளில் அடிப்படை வசதிகளின்றி அவதியுற்ற இந்த மக்களுக்கு ஒரு கூரையின் கீழ் வாழ்வாதார வசதிகளோடு வாழும் வாய்ப்பு கிடைத்துள்ளது. NPA/சொலிடாரின் இந்தப் புதிய வேலைத்திட்டத்தின் மூலம் இவர்களின் வாழ்விலும் புத்தொளி ஏற்பட்டுள்ளது.

மெரில் திஸேரா




Published by The Consortium of Humanitarian Agencies (Gte) Ltd. (CHA), 86, Rosmead Place, Colombo 07. Printed by Pace Printers,45/4,Stanley Place, Colombo 10